NIBM
BUILDING COMPETENCIES

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report 2014

ජාතික ව්‍යාපාර කළමනාකාරීත්ව ආයතනය
தேசிய வியாபார முகாமை நிறுவனம்
NATIONAL INSTITUTE OF BUSINESS MANAGEMENT

“இலங்கையில் மிகவும் நம்பிக்கைவாய்ந்த கல்வியின் அடையாளம்”

NIBM
BUILDING COMPETENCIES



தேசிய வியாபார முகாமை நிறுவனம்

120/5, விஜேராம மாவத்தை

கொழும்பு – 07

தொலைபேசி : 011 5321000

இணையதளம் : *www.nibm.lk*

NIBM
BUILDING COMPETENCIES

உள்ளடக்கங்கள்	பக்க இல.
எமது தொலைநோக்கு	3
எமது உறுதிமொழி	5
மைல்கற்கள்	7
ஆளுனர் சபை	8
அறிமுகம்	10
மனித வளங்கள் முகாமைத்துவம்	11
தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை (தே.வி.மு.பா.)	22
டிப்ளோமா வழங்கல் வைபவம் - 2014	25
கூட்டாண்மை சமூகப் பொறுப்பு	28
சாதனைகள் - 2014	29
எதிர்காலத் திசைகள்	31
பிரிவுசார் கட்டமைப்பு	32
உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு	32
முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவின் வேறு செயற்பாடுகள்	36
பிராந்திய நிலையங்கள்	38
நூலகம், ஆவண நிலையம்	44
தொழில் வழிகாட்டல் அலகு	47
பரீட்சை அலகு	48

எமது தொலைநோக்கு

"இலங்கையில் சிறந்த வியாபாரக் கல்வித் தாபனமாக விளங்குதல்"



எமது செயற்பணி

"பயிற்சியினதும், உசாவுகையினதும் ஊடாக மக்களிலும், தாபனங்களிலும் தகுதிகளை முன்னேற்றும் பணியில் நாம் இருக்கின்றோம்."

எமது குறிக்கோள்கள்


- வாழ்க்கைத்தொழில் அறிவையும், தகைமைகளையும் நாடி நிற்பவர்களுக்கு இணைந்த பிரிவுகளில் தரமான வியாபார முகாமைத்துவக் கல்வியையும், அறிவுறுத்தல்களையும் வழங்குதல்.
- நன்கு-கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் ஊடாக, அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் முகாமையாளர்களினதும், மேற்பார்வைப் பணியாளர்களினதும் தகுதிகளை விருத்தி செய்தல்.
- முகாமைத்துவத்தில் ஆக்கத்திறனானதும், பயனுறுதிவாய்ந்ததுமான பங்கெடுப்புக்கு பணியாற்றும் வாழ்க்கைத்தொழில்புரிவோரைப் பயிற்றுவித்தல் மற்றும் அறிவூட்டுதல்.
- கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஊடாக, தாபனங்களில் உற்பத்தித்திறனின் மேம்படுத்தலை வசதிப்படுத்தல்.
- செயற்றிறன் நியமங்களைத் தாபிப்பதில் அரசாங்க, பொது மற்றும் தனியார் துறைத் தாபனங்களுக்கு முகாமைத்துவ உசாவுகையையும், ஆலோசனைச் சேவைகளையும் வழங்குதல் மற்றும் தாபனரீதியான வளர்ச்சியை நோக்கி மனித வளப் பங்களிப்பினை உச்சமாக்குதல்



எமது உறுதிமொழி

பொருட்களுக்கும் அத்துடன் சேவைகளுக்கும் தரத்தின் அம்சம் அதிகளவு உறுதிமொழியைச் சேர்க்கின்றது. சமூகத்தினுள், வாடிக்கையாளர் எதிர்பார்ப்பின் பூரணமான திருப்தியை உறுதிப்படுத்துவதற்காக தரத்திற்கான அவசியம் படிப்படியாக அதிகரிக்கின்றது. இக் கருத்துருவைக் கரிசனைக்கு எடுப்பதன் மூலம், ISO 9001: 2008 என்ற மிகவும் கிட்டிய சர்வதேச தர நியமத்தை தே.வி.மு.நி. பெற்றுள்ளது. இது நிறுவனத்தினால் வழங்கப்படும் கல்வியின் நியமங்களை உறுதிப்படுத்துகின்றது. 2007ஆம் ஆண்டில், முகாமைத்துவத் தகவல் முறைமைப் பிரிவினால் வழங்கப்பட்ட கல்வியினதும், சேவைகளினதும் மட்டத்தை நிரூபிப்பதற்காக ISO 9001:2000 சான்றளிப்பினை இப்பிரிவு பெற்றது. 2009ஆம் ஆண்டில், அதிசிறந்த சேவையை உறுதிப்படுத்தியதன் மூலம் நிறுவனத்தின் முழுமையான செயற்பாட்டிலான நடைமுறைக்காக தேசிய தர விருதின் சிறப்பு விருதினை வெற்றியீட்டியதுடன், ISO 9001: 2008 சான்றுப்பத்திரத்தையும் பெற்றுக்கொண்டது.

"உறுதிமொழியுடனான இடம்"



SGS

Certificate SG09/02538

The management system of

National Institute of Business Management

No:120/5,Wijerama Mawatha,
Colombo 07,
Sri Lanka.

has been assessed and certified as meeting the requirements of

ISO 9001:2008

For the following activities

Offering short term and long term Professional certification courses including Diploma and Higher Diploma

Further clarifications regarding the scope of this certificate and the applicability of ISO 9001:2008 requirements may be obtained by consulting the organisation

This certificate is valid from 1 September 2012 until 31 August 2015 and remains valid subject to satisfactory surveillance audits.
Re certification audit due before 31 July 2015
Issue 2. Certified since 1 September 2009

Authorised by

SYSTEM CERTIFICATION ISO 9001 SGS

UKAS MANAGEMENT SYSTEMS 005

SGS United Kingdom Ltd Systems & Services Certification
Rossmore Business Park Ellesmere Port Cheshire CH65 3EN UK
t +44 (0)151 350-6666 f +44 (0)151 350-6600 www.sgs.com

SGS 9001-8 01 0311

Page 1 of 1

நிறுவனத்தின் நோக்கங்கள்

பின்வரும் பின்வரும் நியதியாக்க நோக்கங்களை நிறுவனம் கொண்டுள்ளது:

- அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பொறுப்பு முயற்சிகளின் முகாமையாளர்களையும், மேற்பார்வைப் பணியாளர்களையும் முன்னேற்றுதல்.
- முகாமைத்துவத்தில் ஆக்கத்திறனான பங்கெடுப்புக்கு வாழ்க்கைத்தொழில் புரிவோரைப் பயிற்றுவித்தல் மற்றும் அறிவூட்டுதல்.
- முகாமைத்துவத்தில் நிபுணத்துவச் சேவைகளை ஏற்பாடு செய்தல், செயற்றிறன் நியமங்களைத் தாபித்தல், மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்.
- செயல்நிறைவேற்ற அபிவிருத்திக்காக மனிதப் பங்களிப்பை உச்சப்படுத்துவதற்காக ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.
- சூழலின் சிறந்த பாராட்டுக்கு சம்பந்தப்பட்ட சமூக-பொருளாதார அம்சங்களினதும், முகாமைத்துவ அம்சங்களினதும் மீது ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றல் மற்றும் தரவுகளைத் திரட்டுதல்.
- வெளியார் தாபனங்களுக்கு முகாமைத்துவத் தகவல் சேவைகளை வழங்குதல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஆளணியினரைப் பயிற்றுவித்தல்.
- அவர்களது முறைமைகளையும், நடைமுறைகளையும் மற்றும் செய்முறைகளையும் மேம்படுத்துவதற்காக கூட்டுத் துறைக்கு உசாவுகைச் சேவைகளை வழங்குதல் மற்றும் அவர்களது திட்டமிடல் நடைமுறையில் உதவியளித்தல், அத்துடன் பொதுவாக மாற்றமடையும் சூழல் காரணிகளினால் முன்வைக்கப்படும் சவால்களை நிறைவேற்றவதற்கு அவர்களது முயற்சிகளில் உதவியளித்தல்.
- கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களின் ஊடாக தாபனங்களில் உற்பத்தித்திறனிலான மேம்படுத்தலுக்கு வசதியளித்தல்.

நாம் வழங்குகின்றோம்:

- **எமது வாடிக்கையாளர்களுக்கு,**

  தனிப்பட்டவர்கள் : தொழில் முனைப்பிலான நன்கு அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் மற்றும் அவர்களது தகுதிகளைக் கட்டியெழுப்புவதற்கான ஆதரவு

  தாபனங்கள் : தாபனரீதியான செயற்றிறனைக் குறிக்கோளாகக் கொண்டு ஆற்றலளவைப் பலப்படுத்துதல்

- **எமது பணியாளர்களுக்கு,**

  வாழ்க்கைத்தொழில் சுதந்திரம், செயற்றிறன் அடிப்படையிலான வெகுமதிகள், அன்பான வேலை செய்யும் சூழல் மற்றும் நிறுவனத்துடன் கற்பதற்கும், வளர்வதற்குமான வாய்ப்பு.

- **எமது வருகைதரும் பீடத்திற்கு,**

  அங்கீகாரம், சராசரிக்கு மேற்பட்ட வெகுமதிகள் மற்றும் வலைப்பின்னலமைப்புக்கான வாய்ப்பு.

- **எமது பங்காளிகளுக்கு,**

  உலக தரத்திலான விநியோக வசதி மற்றும் நிபுணத்துவம்.

- **எமது சமூகத்திற்கு,**

  அறிவை பரப்புதல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.

மைல்கற்கள்

1968

முகாமைத்துவ அபிவிருத்தி, உற்பத்தித்திறன் நிலையம் (மு.அ.உ.நி.) தாபிக்கப்பட்டது.

1968 - 1976

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் கீழ் சுதந்திரமான தாபனமொன்றாக மு.அ.உ.நி. உருவாக்கப்பட்டது. தேசிய முகாமை நிறுவனம் (தே.மு.நி.) என்ற பெயரின் கீழ் அது தொழிலாற்ற ஆரம்பித்ததுடன், தேசிய வியாபார முகாமை நிறுவனமாக நிறுவனம் ஒன்றிணைக்கப்படும் வரை, தேசிய முகாமை நிறுவனம் (தே.மு.நி.) என்ற பெயரின் கீழ் முகாமைத்துவ அபிவிருத்தி, உற்பத்தித்திறன் நிலையமாக தொழிற்பட ஆரம்பித்தது.

1980 - 1986

கணனி முறைமை வடிவமைப்பில் முதலாவது டிப்ளோமா அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன், குருநாகலில் முதலாவது பிராந்திய நிலையம் அமைக்கப்பட்டது.

1991 - 1996

சுய நிதிப்படுத்தல், அரசாங்கத் துறைத் தாபனமொன்றாக நிறுவனத்தை முன்னேற்றுவதற்காக தே.வி.மு.நி. பாராளுமன்ற அதிகாரச் சட்டம் திருத்தப்பட்டது.

“மாற்றமடையும் சூழலொன்றில் உற்பத்தித்திறனை அதிகரித்தல்” என்ற கருப்பொருளின் கீழ் அதன் வருடாந்த சமவாயத்தை நடத்துவதன் மூலம் அதன் 25ஆவது வருடாந்த விழாவை தே.வி.மு.நி. குறித்துக்கொண்டது.

அயர்லாந்து, டப்ளின் பல்கலைக்கழகக் கல்லூரியுடனான கூட்டொப்பந்தத்தில் முகாமைத்துவத் தகவல் முறைமைப் பட்டத் திட்டத்தில் பி.எஸ்சி. ஆரம்பமாகியது. மத்திய மாகாணத்தில் உள்ளவர்களின் வளர்ச்சியுறும் கிராக்கியை நிறைவேற்றுவதற்காக கண்டியில் பிராந்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

1999 - 2004

அயர்லாந்து தேசியப் பல்கலைக்கழகத்தினால் முகாமைத்துவத் தகவல் முறைமையின் பீ.எஸ்சி பட்டத்தைச் சூட்டுவதற்காக தே.வி.மு.நிறுவனத்தின் முதலாவது பட்டமளிப்பு வைபவம் நடைபெற்றது.

வியாபார முகாமைத்துவக் கல்வி தொடர்பான சகல விடயங்கள் மீது சபைக்கு ஆலோசனை வழங்குவதற்காக 1991இன் இல.28 தே.வி.மு.நி. அதிகாரச் சட்டத்தின் கீழ் வியாபார முகாமைத்துவ கல்விச் சபை நிறுவப்பட்டது. நிறுவனத்தின் தரத்தையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதில் பங்களித்த ஜப்பானிய 5S முறையை தே.வி.மு.நி. அமுல்படுத்தியது.

2007 - 2014

வியாபார நிருவாகம், நிதி, மனித வளங்கள், முகாமைத்துவத் தகவல் முறைமைகள், ஏற்பாட்டியல் மற்றும் கைத்தொழில் முகாமைத்துவம் ஆகிய வற்றில் பீ.எஸ்சி முகாமைத்துவப் பட்டமொன்றை மேற்கொள்வதற்காக தே.வி.மு.நிறுவனத்தின் மாணவர்கள் தகுதியடைந்தார்கள். பிரிவினால் வழங்கப்பட்ட உயர் தரத்திலான கல்வியை அங்கீகரித்து ISO 9001: 2000 சான்றளிப்பை முகாமைத்துவத் தகவல் முறைமைப் பிரிவு பெற்றது.

40ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களுடன் ஒத்திருப்பதற் காக இடவசதியிலான கற்கைப் பகுதிகளை வழங்குவதற்காக தே.வி.மு. நிறுவனத்தின் உட்கட்டமைப்பின் மேலதிக முன்னேற்றத்தில் அதிகளவை ஆளுனர் சபை மூலதனமிட்டது. தே.வி.மு. நிறுவனத்தின் பட்டம் அளிக்கும் பாடசாலையான தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை நுகேகொடையில் வெற்றிகரமாக செயற்படுகின்றது.

ஆளுனர் சபை

பேராசிரியர் லக்ஸ்மன் ஜயதிலக்க
தலைவர்
தேசிய வியாபார முகாமை நிறுவனம்
120/5, விஜேராம மாவத்தை
கொழும்பு 07

கலாநிதி இ.எ.வீரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தேசிய வியாபார முகாமை நிறுவனம்
120/5, விஜேராம மாவத்தை
கொழும்பு 07

திரு. அஜித் வத்துஹேவா
தலைவர்
இலங்கை வர்த்தக, கைத்தொழில் சபைகளின் சம்மேளனம்
"சம்மேளனம் இல்லம்"
 # 467/1/1, சிறிமாவோ பண்டாரநாயக்கா மாவத்தை
கொழும்பு 14.

திரு. சுனில விஜேசிங்க
தலைவர்
தேசிய வர்த்தகச் சபை
இல.450, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை
கொழும்பு 08

கலாநிதி அஜந்த தர்மசிறி
பதில் பணிப்பாளர்
பட்டத்திற்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனம்
இல.28, லெஸ்லி ரணகல மாவத்தை
கொழும்பு 08

திருமதி நிலாந்தி சுகததாஸ
மேலதிகச் செயலாளர் (இளைஞர் அபிவிருத்தி)
இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சு, ''நிபுனத பியஸ்ஸ''
354/2, எல்விற்றிகல மாவத்தை
கொழும்பு 05

திருமதி ஜே.பி.மாம்பிற்றிய
உதவி ஆளுனர்
இலங்கை மத்திய வங்கி
30, ஜனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

செல்வி டி.சி.டபிள்யு.ஹப்புகொட
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
பொது வியாபார முயற்சிகள் திணைக்களம்
நிதி, திட்டமிடல் அமைச்சு
கொழும்பு 01

திரு. ரெஷான் தேவபுர
பிரதம நிறைவேற்று அலுவலர்
இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
No-160/24, கிரிமண்டல மாவத்தை
கொழும்பு 05

திரு.ரம்யசந்திரா குணசேகர
சட்டத்தரணி
இல. 33, ஸ்ரீ தர்மராம வீதி
கோட்டை
மாத்தறை

அறிமுகம்

இலங்கையில் தேசிய வியாபார முகாமை நிறுவனம் (தே.வி.மு.நி.) முதன்மையான வியாபாரப் பாடசாலையாகும். நாம் உலகளாவிய போக்குகளுக்கு அமைவாக விளங்குவதுடன், இன்றைய தேவைகளுக்குப் பொருந்துகின்றவாறு எமது உற்பத்திகளைத் தொடர்ச்சியாக தரமுயர்த்துகின்றோம். கடந்து போன ஆண்டுகளில் எமது சாதனையை நாம் விருத்தி செய்துள்ள அதேவேளை, முகாமைத்துவப் பயிற்சியிலும், கல்வியிலும் முதன்மையான நிலையிலிருப்பதை நிரூபிக்கின்றோம். நாம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு சிறந்த எதிர்காலங்களைச் செதுக்குவதற்கு உதவியுள்ளோம்.

சர்வதேச தொழில் தாபனத்தின் திட்டங்களின் அமுலாக்கத்திற்கான ஒரு முகவராண்மையான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கூட்டுமுயற்சியில் கைத்தொழில்கள், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் 1968இல் தாபிக்கப்பட்ட தே.வி.மு.நி. 46 வருடங்களாகப் பணியாற்றுகின்றது. இது பின்னர் பாராளுமன்றச் சட்டம் ஒன்றினால் (1976இன் 23ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைச் சட்டம்) தேசிய வியாபார முகாமை நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டது. 1991இன் 28ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இந்த அதிகாரச்சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ், நியதியாக்கச் சபையொன்றாக தொழிற்படுகின்ற தே.வி.மு.நி. அரசாங்கத் துறையில் உள்ள ஒரு கல்வி நிறுவனமாகும். நாம் சுய-நிலைத்திருத்தலிலான, சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தை வழங்கும் நிறுவனமாவோம். 2009ஆம் ஆண்டிலிருந்து தேசிய தர விருதுகளின் பரிசளிப்பில் சிறப்பு விருதும், மேலதிகமாக தே.வி.மு.நிறுவனத்திற்கு ISO-9001-2008 கட்டளைகள் சான்றுப்பத்திரமும் பரிசளிக்கப்பட்டுள்ளன.


2007இன் இல.7 கம்பெனிகள் சட்டத்தின் கீழ் வர்த்தக வியாபார முயற்சியொன்றாக வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை (தே.வி.மு.பா.) என்ற பெயரில் வியாபாரப் பாடசாலையொன்றைப் பதிவுசெய்வதென தே.வி.மு.நி.இன் ஏற்பாடுகள் மீதான அடிப்படையில் தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் ஆளுனர் சபை தீர்மானித்தது. இது நிதி, திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட "ஒரு வழிகாட்டி - அரசாங்க வியாபார முயற்சியின் தலைவரும், பணிப்பாளர் சபைகளும்" மீதான அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் முழுவதும் உரித்தினைக் கொண்ட துணை நிறுவனமொன்றாக தே.வி.மு.பா. தொழிற்படும்.

மனித வளங்கள் முகாமைத்துவம்

அதன் அமைப்புரீதியிலான நோக்கங்களை அடைவதற்கும், மாணவருக்கும், மற்றும் பணியாளர்களுக்கும் பெறுமதியை வழங்குவதற்கும் வேலைப்படையின் முகாமைத்துவம் மிகவும் முக்கியமானது என்பதை தே.வி.மு.நி. அடையாளம் கண்டுள்ளது. இப்பணியில் எமது ஊழியர்கள் முழுமையாகச் சம்பந்தப்பட்டு, ஈடுபட்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துமுகமாக, பின்வரும் மூலக்கூறுகளை ஒன்றிணைக்கின்ற மாதிரியொன்றை நாம் விருத்தி செய்துள்ளோம்.

- ஆட்சேர்ப்பு, தெரிவு மற்றும் நியமனம்
- மூலோபாயத்திலான திசை (நீண்ட கால)
- செயற்றிறன் இலக்குகள் (குறுகிய கால)
- செயற்றிறன் மதிப்பாய்வு
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி
- வெகுமதிகள் முகாமைத்துவம்
- தொழில் முன்னேற்றம்

அவர்கள் நிறைவேற்றுகின்ற வேலையை நோக்கியும், தாபனத்தை நோக்கியும் உயர்வான ஊழியர் அர்ப்பணிப்பினை முன்வைப்பதற்கு ஒன்றுடன் ஒன்று எவ்வாறு இந்த ஆக்கக்கூறுகள் ஒருங்கிணைந்துள்ளன என்பது பின்வரும் தே.வி.மு.நி. மனித வள முகாமைத்துவ மாதிரியில் சித்தரிக்கப்பட்டுள்ளது.



மாதிரி: மனித வள முகாமைத்துவ மாதிரி

நாம் இரு ஊழியர் வகுதிகளைக் கொண்டுள்ளோம் அதாவது, அறிவைக் கைமாற்றுதல், தகுதியை முன்னேற்றுதல் மற்றும் உசாவுகை ஆகிய பெறுமதியை உருவாக்குகின்ற நடைமுறையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள நூற்கல்விப் பணியாளர் மற்றும் நிறுவனத்தை நிருவகிப்பதற்கு ஆதரவு அவசியமான நூற்கல்வி-சாராப் பணியாளர். இவ்வகுதிகளின் செயற்றிறன் மதிப்பாய்வும், வெகுமதியளித்தல் திட்டமும் ஒன்றிலிருந்து ஒன்று வித்தியாசப்படுகின்றன. எனினும், தே.வி.மு.நி. குறிக்கோள்களினதும், நோக்கங்களினதும் சாதனையிலிருந்தும், அவற்றுக்கான இணைப்பிலிருந்தும் இரு வகுதிகளுக்கான செயற்றிறன் மதிப்பாய்வும், வெகுமதியளித்தலும் தோன்றுகின்றன.

மாதிரியில் காட்டப்பட்டுள்ளவாறு, ஒழுங்கமைப்புத் தேவைகள் மீதான அடிப்படையில் தொழில் பகுப்பாய்விலிருந்து தோன்றுகின்ற தொழில் விவரணத்தை எமது ஊழியர்கள் கொண்டுள்ளார்கள். தே.வி.மு.நி.இன் நீண்ட கால மற்றும் நடுத்தர காலத் திட்டம் வரையிலான அங்கமாகவுள்ள நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றின் ஊடாக ஊழியர்களுக்கு மூலோபாய வழிகாட்டல் வழங்கப்படுகின்றது.
நோக்கங்களிலிருந்து பெறப்பட்டுள்ள திட்டத்தைச் சாதிப்பதும், வருடாந்த வரவு- செலவுத் திட்டத்தில் குறித்து வைக்கப்பட்டுள்ள இலக்குகளைச் சாதிப்பதும் தனிப்பட்ட ஊழியர்களுக்கான பொறுப்புக்களாகும்.

செயற்றிறன் மதிப்பாய்வுத் தாள்களின் ஊடாக வருடாந்தம் தனிப்பட்ட அடிப்படையில் ஊழியர் பொறுப்புக்கள் தொடர்பான செயற்றிறன் அளவீடு செய்யப்படுகின்றது. உசாவலர்களினதும், பணிப்பாளர்களினதும் செயற்றிறன் மதிப்பாய்வுத் தாள்களில் பகுப்பாய்வின் உள்ளடக்கமும், ஆழமும் அதிகளவு தகவலையும், ஊடுருவலையும் கைப்பற்றுவதற்காக எஞ்சியுள்ள பணியாளரிடமிருந்து சிறிதளவு வித்தியாசப்படுகின்றது. தொழில் விவரணத்திலும், வருடாந்த வரவு-செலவுத் திட்டத்திலும் குறித்துரைக்கப்பட்டுள்ள எதிர்பார்ப்பினை ஊழியர் ஒருவரின் செயற்றிறன் நிறைவேற்றினால், சம்பள ஏற்றம் மற்றும் தொழிலை விரிவுபடுத்தல் ஆகியன ஊடாக வெகுமதியளிக்கப்படுகின்றது.

எதிர்பார்க்கப்பட்டதை விட செயற்றிறன் குறைவானதென்றால், தனது தொழிலை நிறைவேற்றுவதற்கு அவசியப்படுகின்ற திறன்களையும், தகுதிகளையும் அடைவதற்கு அவருக்கு ஆதரவளிக்கின்ற பயிற்சி மற்றும் முன்னேற்ற நடைமுறையொன்றின் ஊடாக ஊழியர் அனுப்பப்படுகின்றார். சரியான ஊழியர் மனோநிலைக்கும், நடத்தைக்கும் பயிற்சியும், முன்னேற்றமும் வழங்கப்படுகின்றன.

அதிகளவு தகைமைகளையும், தகுதிகளையும் கொண்டிருப்பதற்காக தே.வி.மு.நி.இல் நடத்தப்படும் திட்டங்களிலும், வெளிவாரித் திட்டங்களிலும் பங்கெடுப்பதற்கு எமது ஊழியர்களுக்கு நாம் ஊக்கமளிக்கின்றோம். உயர்வான தகைமையை ஊழியர் ஒருவர் அடையும் போது, அவர் உயர் பதவிநிலைக்கு விண்ணப்பிக்க முடியும்.

கீழே அடையாளம் காட்டப்பட்டுள்ளவாறு, பொருள் நன்மைகளையும், உரிமை உணர்வுபூர்வமான ஆதரவையும் ஊழியர்களுக்கு வழங்குவதன் மூலம், அவர்களது திருப்தியை உயர்த்துவதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

- நிதிசார் நன்மைகள்: ஊக்குவிப்புகள், சம்பள ஏற்றங்கள், மருத்துவச் செலவினங்களின் மீள்நிரப்பல்
- நிதிசாராத நன்மைகள்: பதவியேற்றங்கள், கடல்கடந்த பயிற்சி
- வேலை செய்யும் சூழல்/வசதிகள்
- தொழில் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்
- தொழிலை விஸ்தரித்தல் மற்றும் வளப்படுத்தல்
- மேற்பார்வையாளர்கள், சகபாடிகள் மற்றும் கீழ்பணிவோர் ஆகியோரின் ஆதரவு.

இத் துறைகளில் அவர்களின் வீதப்பாட்டினை எமது ஊழியர் திருப்தி அளவீடு கைப்பற்றியுள்ளதுடன், குறைந்த வீதப்பாட்டுடனான துறைகள் முன்னேற்றத்திற்கான வாய்ப்பாகத் தெரிகின்றது.

நீண்ட கால அடிப்படையில் மாணவர்/வாடிக்கையாளர் தாபன திருப்தியை மேம்படுத்துகின்றதும், குறுகிய காலத்தில் வரவு-செலவுத்திட்டமிடப்பட்ட வருமானத்தைச் சாதிக்கின்றதுமான பொதுவான குறிக்கோளை நோக்கி தே.வி.மு.நி.இல் உள்ள முழு வேலைப்படையும் பணியாற்றுகின்றது. உயர்வான நிதிசார் சாதனைகள் சிறந்த வெகுமதிகளை அவர்களுக்கு வழங்குகின்றன. இது உசாவலரிலிருந்து தே.வி.மு.நி. வேலைப்படையின் சகல அடுக்குகளினதும் கூட்டுமுயற்சியினதும், ஒத்துழைப்பினதும் ஊடாக சாத்தியமானதாகும். எமது வேலை முறைமையின் பிரகாரம், புதுமையானதும், இறுதியில் தே.வி.மு.நி. பயனுறுதிவாய்ந்ததன்மையை நோக்கி ஆதரவளிப்பதுமான வகிபங்கொன்றை ஒவ்வொரு ஊழியரும் ஆற்ற வேண்டியுள்ளது. குறிப்பிதழ்கள், சுற்றறிக்கைகள், அறிவித்தல்கள், கூட்டங்கள், வாய்மொழியிலான அறிவித்தல் மற்றும் பின்னூட்டல்கள், தொலைபேசி அழைப்புக்கள், மற்றும் ஈ-மெயில்கள் ஆகியவற்றின் ஊடாக வேறுபட்ட அடுக்குகளுக்கு இடையிலான தொடர்பாடல் இடம்பெறுகின்றது. பொருத்தமானவாறு இதே முறைகளின் ஊடாகவே கண்டியிலும், குருநாகலிலும், காலியிலும் மற்றும் மாத்தறையிலும் அமைந்துள்ள நிலையங்களுடன் தொடர்பாடல் கொள்ளப்படுகின்றது.

மனித வளங்களின் முன்னேற்றம்

இயக்கமானது முன்னோக்கிச் செல்வதற்கும் மற்றும் கற்பதற்கும், முன்னேற்றத்திற்குமான வாய்ப்புக்களின் ஏற்பாட்டினையும் இயலச்செய்வதற்குமான பங்கிடப்பட்ட பொறுப்பினைப் பிரித்துக்கொடுப்பதே அபிவிருத்தியாகும். தமது குறிப்பிட்ட தொழிலின் வகிபங்குகளினதும், அவர்கள் பணியாற்றுவதற்கான நடைமுறைகளினதும் சம்பந்தத்திலும் மற்றும் புதிய பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை அவர்கள் திசைதிருப்பப்பட்டுள்ள இந்நோக்கத்திற்காகவும் தமது பங்களிப்பினை முன்னேற்றுவதற்கு ஊழியர்கள் ஊக்கமளிக்கப்படுகின்றார்கள். அது ஊழியரின் தகுதியின் பகுப்பாய்வையும் மற்றும் ஊழியர்களின் நம்பகத்தன்மை மட்டங்களின் முன்னேற்றத்தையும் பின்வரும் தொழில்நுட்பங்கள் மூலம் மேற்கொண்டுள்ளது.

- தொழில் சுழற்சி
- ஊழியர்களை மீளமர்த்துதல்
- தொழிலை விரிவுபடுத்தல்
- தொழிலை வளமூட்டுதல்

இரு பிரதான ஊழியர் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நிறுவனத்தின் பிரதான பணிகளைப் பராமரிப்பதற்காகவும், ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுவதன் மூலம் நிறுவனத்தின் பிரதான பணிகளையும், நோக்கத்தின் ஒத்துழைப்பினதும், பொதுத்தன்மையினதும் ஆர்வத்தினை ஒன்றுடன் ஒன்று செயற்படுத்துவதன் மூலமும், கட்டியெழுப்புதல் மூலமும் நிறுவனத்தின் உயிர்ப்புள்ள ஆர்வத்தினையும் பராமரிக்கும் காரணத்திற்காக அவை உருவாக்கப்பட்டள்ளன.

- விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கம்
- மரண நன்கொடைச் சங்கம்

மனித வளங்களின் பயிற்சி

தே.வி.மு.நி.இன் பயிற்சிக்கும் மற்றும் வெளிவாரிப் பயிற்சித் திட்டங்களுக்கும் தே.வி.மு.நி.இன் நூற்கல்வி உறுப்பினர்களும் மற்றும் நூற்கல்வி சாராத பணியாளர்களும் அனுப்பப்பட்டுள்ளார்கள். இத்தகைய திட்டங்களின் விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

உள்ளகப் பயிற்சித் திட்டங்களில் பங்கெடுப்பு

	பெயர்	பயிற்சிநெறியின் தலைப்பு
1	திரு.எஸ்.வி.காமினி	கணனி விஞ்ஞானத்தில் சான்றுப்பத்திரப் பயிற்சிநெறி
2	தே.வி.மு.நி. உசாவலர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் நிறைவேற்றுனர்கள்	மனித வள அரங்கு

வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பங்கெடுப்பு

வாழ்க்கைத்தொழில்புரிபவர்களின் தகுதிகளை மேம்படுத்துவதற்காக ஊக்குவிப்பு ஒன்றாக அவர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி வாய்ப்புக்களை நிறுவனம் வழங்குகின்றது. முறைமையான வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பங்கெடுப்பு மீதான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

	பெயர்	பயிற்சிநெறியின் தலைப்பு
1	திரு.டி.எம்.எ.குலசூரிய	"முகாமைத்துவ அபிவிருத்தியை நிறுவகரீதிப்படுத்தலும், தென் ஆசிய பதிலிறுப்பும"
2	கலாநிதி இ.எ.வீரசிங்க	பங்காண்மை அபிவிருத்தியின் கூட்டம், பிலிமவுத் பல்கலைக்கழகம் UCD
3	திரு.டி.எம்.எ.குலசூரிய	பங்காண்மை அபிவிருத்தியின் கூட்டம், பிலிமவுத் பல்கலைக்கழகம் UCD
4	திரு.ஜி.டி.பேர்னாட் சில்வா	உயர் கல்வி முகாமைத்துவம் மீதான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்
5	திருமதி பவித்ரா விக்ரமசூரிய	உயர் கல்வி முகாமைத்துவம் மீதான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்
6	திரு.பி.எஸ்.சி.ரொட்ரிக்கோ	உயர் கல்வி முகாமைத்துவம் மீதான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்
7	செல்வி ஜே.எ.துஷாரி	உயர் கல்வி முகாமைத்துவம் மீதான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்
8	திருமதி டி.கே.தங்கல்ல	உயர் கல்வி முகாமைத்துவம் மீதான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்
9	கலாநிதி இ.எ.வீரசிங்க	1ஆவது உலகலாவிய JAC வலைப்பின்னலமைப்பு மகாநாடு
10	திரு.டி.எம்.எ.குலசூரிய	1ஆவது உலகலாவிய JAC வலைப்பின்னலமைப்பு மகாநாடு
11	திரு.ஆர்.எ.கே.ரணவக்க	AACSBஇன் ஆசிய பசுபிக் வருடாந்த மகாநாடு
12	திரு.எச்.எச்.எல.அமரசிங்க	AACSBஇன் ஆசிய பசுபிக் வருடாந்த மகாநாடு

உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பங்கெடுப்பு


	பெயர்	பயிற்சிநெறியின் தலைப்பு
1	திரு.இமான் அஷ்லி	ISO 9001 சர்வதேச கணிப்பீடு பயிற்சி
2	திரு. மொஹமட் ரிஹாம்	ISO 9001 சர்வதேச கணிப்பீடு பயிற்சி
3	செல்வி ஹிருனி ரத்வத்த	ISO 9001 சர்வதேச கணிப்பீடு பயிற்சி
4	செல்வி செனானி தேனுவர	ISO 9001 சர்வதேச கணிப்பீடு பயிற்சி
5	திரு. திஸார சாரங்க	ISO 9001 சர்வதேச கணிப்பீடு பயிற்சி
6	திரு. ஆர்.எம்.ஜயதிலக்க	ISO 9001 சர்வதேச கணிப்பீடு பயிற்சி
7	செல்வி ஆர்.எல்.எல்.டீ. சொயிஸா	உயர்தர மல்ரிமீடிய மற்றும் இணையதள வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தித் தொழில்நுட்பங்கள் மீதான பயிற்சி நெறி
8	திரு. எம்.பி.ரி.சமரசேகர	நீரிறைக்கும் இயந்திரத்தினதும், ஆழத்தியினதும் பராமரிப்பு மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
9	திரு.ஜி.டி.பேர்னாட் சில்வா	நவீன தின தாபனமொன்றைக் கட்டியெழுப்புதல் மீதான நிகழ்ச்சித்திட்டம்
10	திருமதி எஸ்.யோகராஜா	நவீன தின தாபனமொன்றைக் கட்டியெழுப்புதல் மீதான நிகழ்ச்சித்திட்டம்
11	திரு. சமன் ரொட்ரிகோ	நவீன தின தாபனமொன்றைக் கட்டியெழுப்புதல் மீதான நிகழ்ச்சித்திட்டம்
12	திரு. ஜி.எ.லக்ஸ்மன்	நவீன தின தாபனமொன்றைக் கட்டியெழுப்புதல் மீதான நிகழ்ச்சித்திட்டம்
13	திருமதி நில்மினி தர்மவர்தனா	நவீன தின தாபனமொன்றைக் கட்டியெழுப்புதல் மீதான நிகழ்ச்சித்திட்டம்
14	திருமதி சி.மஹன்தகே	நவீன தின தாபனமொன்றைக் கட்டியெழுப்புதல் மீதான நிகழ்ச்சித்திட்டம்
15	திருமதி சீதா விஜேசிங்க	நவீன தின தாபனமொன்றைக் கட்டியெழுப்புதல் மீதான நிகழ்ச்சித்திட்டம்
16	திரு. ஆர்.ஜி.மஞ்சநாயக்க	தேசிய தகவல் தொழில்நுட்ப மகாநாடு 2014
17	திரு.நதீப் தரங்க	NYCஇல் BPO நிலைய நோக்கத்திற்காக ஆசான் பயிற்றுனர்கள்
18	செல்வி சச்சினி தினுஷ்கா மஹன்தகே	NYCஇல் BPO நிலைய நோக்கத்திற்காக ஆசான் பயிற்றுனர்கள்
19	தே.வி.மு.நி. உசாவலர்/ விரிவுரையாளர்கள் மற்றும் நிறைவேற்றுனர்	தேசிய முகாமைத்துவ மகாநாடு 2014
20	செல்வி கே.ஜி.ஐ.டில்ருக்ஷி	ISO 9001 தர முகாமைத்துவ முறைமைகள் தலைமை கணிப்பீட்டாளர் நிகழ்ச்சித்திட்டம்
21	திரு. ஆர்.எம்.எஸ்.ஹேரத்	AutoCAD 2D & 3D மீதான உயர்தர பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
22	திருமதி எஸ்.அமீலன்	ஆகுசெலவு கணக்கீட்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
23	செல்வி கே.கலைப்பிரியா	கருத்திட்ட முகாமைத்துவச் சான்றளிப்பு
24	செல்வி சி.டி.முத்துகமகே	ISO 9001 உள்ளகக் கணிப்பீடு பயிற்சி
25	செல்வி சீதா விஜேசிங்க	ISO 9001 உள்ளகக் கணிப்பீடு பயிற்சி

திட்டங்களில் பங்கெடுத்த ஊழியர்களின் எண்.

	2013	2014
உள்ளகப் பயிற்சித் திட்டம்	16	02
உள்நாட்டுப் பயிற்சித் திட்டம்	16	25
வெளிநாட்டுப் பயிற்சித் திட்டம்	0	12
மொத்தம்	**32**	**39**

அட்டவணை 01 - திட்டங்களில் பங்கெடுத்த ஊழியர்களின் எண்.

திட்டங்களில் பங்கெடுத்த ஊழியர்களின் எண்.




உருபு 01 - பயிற்சித் திட்டங்களில் பங்கெடுத்த பயிற்சியாளர்களின் எண்.

தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் மனித வளங்கள்

	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 2013.12.34	2010	2011	2012	2013	2014
நிறைவேற்று தரத்திலான பணியாளர்	50	31	48	36	43	48
நிறைவேற்று தரத்திலான பணியாளர்	53	20	19	18	19	18
உதவிப் பணியாளர்	119	100	93	97	92	97
மொத்தம்	**222**	**151**	**153**	**151**	**154**	**163**

அட்டவணை 02 - நிறுவனத்தின் மனித வளங்களின் உள்ளடக்கம்
குறிப்பு: தே.வி.மு.நி. மனித வள விபரங்கள் மட்டும்



உருபு 02 - நிறுவனத்தின் மனித வளங்களின் உள்ளடக்கம்

2014இன் போது நிறுவனத்தின் ஆட்சேர்ப்புகள்

	பெயர்	பதவி	ஆட்சேர்ப்புத் திகதி
1	செல்வி இ.கித்துல்கொட	உசாவலர் / விரிவுரையாளர்	02.01.2014
2	செல்வி எஸ.டி.மஹன்தகே	உசாவலர் / விரிவுரையாளர்	02.04.2014
3	செல்வி எ.எம்.டி. சந்திரசேன	உசாவலர் / விரிவுரையாளர்	02.04.2014
4	செல்வி டபிள்யு.எம்.எல். வன்னிநாயக்கா	உசாவலர் / விரிவுரையாளர்	02.04.2014
5	செல்வி சி.டி.முத்துகமகே	உசாவலர் / விரிவுரையாளர்	21.04.2014
6	கே.இ.எச்.ஜே.இமல்கா	உசாவலர் / விரிவுரையாளர்	03.11.2014
7	செல்வி டபிள்யு.எம.எஸ்.லக்ஷிகா	உசாவலர் / விரிவுரையாளர்	03.11.2014
8	செல்வி வி.கே.எம்.சந்திமா	உசாவலர் / விரிவுரையாளர்	03.11.2014
9	செல்வி இ.எம்.எ.எஸ்.எதிரிசிங்க	முகாமைத்துவ உதவியாளர்	10.07.2014
10	செல்வி கே.ஆர்.ரினுஷா ராஜபக்ஷ	முகாமைத்துவ உதவியாளர்	01.08.2014
11	திரு. கே. சமீர சம்பத்	தொழிலாளி	01.08.2014
12	திரு. என்.எம்.வீரமன்	முகாமைத்துவ உதவியாளர்	15.08.2014
13	செல்வி எஸ்.எல். வயோமி அமில வாஸனா	முகாமைத்துவ உதவியாளர்	03.11.2014
14	திரு. டி.எம்.ரஞ்ஜித் திசநாக்கா	தொழிலாளி	01.12.2014
15	செல்வி எஸ். ஷாருனி ஹெட்டிஆரச்சி	முகாமைத்துவ உதவியாளர்	01.12.2014
16	திரு. பி.எம்.பிரதீப் சஞ்ஜீவ	தொழிலாளி	01.01.2014
17	செல்வி எல்.டி.பொத்தேஜு	தொழிலாளி	01.01.2014
18	திரு.பீ.ஆர்.எரங்க குணரத்ன	முகாமைத்துவ உதவியாளர்	12.01.2014

ஆண்டின் போது நிறுவனத்தின் இளைப்பாறல்

	பெயர்	பதவி	இளைப்பாறல் திகதி
1	திரு.ஜி.கருணாரத்ன	சாரதி	18.12.2014


செயற்பாட்டு வருமானத்திற்கும், இலாபத்திற்கும் ஊழியர்களின் பங்களிப்பு

ரூபா '000

	2010	2011	2012	2013	2014
செயற்படுத்தல் வருமானம்	551,155	814,687	982,166	1,247,573	1,468,094
நிகர இலாபம்	111,752	298,453	365,042	449,710	410,101
பணியாளர்	151	153	177	204	222
ஊழியர் ஒருவருக்கான செயற்படுத்தல் வருமானம்	3,650	5,324	5,548	6,115	6,613
ஊழியர் ஒருவருக்கான நிகர இலாபம்	740	1,950	2,062	2,204	1,847

அட்டவணை 03 - செயற்பாட்டு வருமானத்திற்கு ஊழியர்களின் பங்களிப்பு

குறிப்பு: தே.வி.மு.நி. மற்றும் தே.வி.மு.பா. ஆகியவற்றின் செயற்பாட்டு வருமானம், நிகர இலாபம் மற்றும் பணியாளர்



உருபு 03 - செயற்பாட்டு வருமானத்திற்கு ஊழியர்களின் பங்களிப்பு

போட்டிக்குரிய சந்தைக்கு முகங்கொடுப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையியல்கள்

தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தைக்கு பொருத்தமான ஆற்றலளவுகளையும், திறன்களையும் வாழ்க்கைத்தொழில்புரிபவர்களும், பட்டதாரிகளும் மற்றும் டிப்ளோமாக்காரர்களும் கொண்டிருக்குமுகமாக தேசிய வியாபார முகாமை நிறுவனத்திலிருந்து தகைமைகளைப் பெறுவதற்காக மனதில் நவீன தேவைப்பாடுகளுடன் முறைமையானதும், ஒழுங்குபடுத்தப்பட்டதுமான தன்மையொன்றில் நிறுவனத்தில் பயிற்சிநெறிகள் நடத்தப்படுகின்றன. இந்நோக்கங்களைச் சாதிப்பதற்காக 2014இன் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையியல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

சகல சேவைகளின் ஏற்பாட்டுக்காக சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் அரசாங்க விடுமுறைகளிலும் (காலை 8.30 முதல் மாலை 4.30 வரை) நிறுவனம் திறந்திருக்கும்.

தொலைபேசிகள் மற்றும் இணையதளம் ஊடாக விண்ணப்பத்தாரிகளைப் பதிவுசெய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் இணையதளத்தின் வழிவகைகள் மூலம் உத்தேசமான தேருனர்கள் சம்பந்தப்பட்ட தகவலைப் பெற முடியும் என்பதுடன் பதிவுசெய்துகொள்ளவும் முடியும். இணையதளம்: www.nibm.lk

பணம், காசோலைகள் மற்றும் கடன் அட்டைகள் ஆகியவற்றின் மூலம் பயிற்சிநெறிக் கட்டணங்களை அனுப்புவதற்கு வசதிகள் உள்ளன. நூற்கல்வி ஆண்டின் ஆரம்பத்திற்கு முன்னரே பயிற்சிநெறிகள் வடிவமைக்கப்படுகின்றன. இதனால், நேரத்திற்கு பொருத்தமான பயிற்சிநெறிகளை மாணவர்கள் தெரிவு செய்ய முடியும்.

நிறுவனத்தின் வகிபங்கு, அதன் பணித் திட்டங்கள் மற்றும் வழங்கப்படவுள்ள சேவைகள் ஆகியவை தொடர்பான விபரங்கள் கடிதங்களினதும், அச்சிடப்பட்ட சாதனங்களினதும் விநியோகம் மூலமும், இணையதளத்தின் மூலமும் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கிட்டச் செய்யப்படும்.

செயலமர்வின் காலம் 7 நாட்களுக்கு குறைவானது என்றால், செயலமர்வு முடிக்கப்படும் அதே தினத்தன்று சான்றுப்பத்திரங்கள் வழங்கப்படும்.

வேறு பயிற்சிநெறிகள் தொடர்பில், பயிற்சிநெறி முடிவடைந்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் சான்றுப்பத்திரங்கள் வழங்கப்படும்.

பொருட்காட்சிகள், செயலமர்வுகள், பத்திரிகை அறிக்கைகள் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஆகியன ஊடாக மக்களின் கவனத்திற்கு நிறுவனத்தின் சேவைகள் கொண்டு வரப்படும்.

கொழும்பில் மட்டுமே நடைபெற்ற பயிற்சிநெறிகள் தற்போது கண்டியிலும், குருநாகலிலும் காலியிலும் மற்றும் மாத்தறையிலும் நடைபெறுகின்றன.

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் தேவைகளைப் பொறுத்து உசாவுகை, உற்பத்தித்திறன் மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி ஆகியவற்றின் சேவைகளுக்காக வசதிகள் கிட்டச் செய்யப்படும்.

ஆண்டு தோறும் வருடாந்த டிப்ளோமா வழங்குதல் வைபவமும், பட்டமளிப்பு விழாவும் ப.ஞா.ச.ம.மண்டபத்தில் சம்பிரதாயபூர்வமான வழியொன்றில் நடைபெறுகின்றன.

மருத்துவக் காப்புறுதி

சிறந்த சுகாதாரத்தினதும், ஊழியர் சேமநலனினதும் அக்கறையின் பேரில் வருடாந்தம் புதுப்பிக்கத்தக்க மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றை யூனியன் அஷ்வரன்ஸ் PLC ஊடாக தே.வி.மு.நி. ஒழுங்குபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தே.வி.மு.நி. பணியாளரின் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுவதற்கான சிட்டைகளுக்கு மேலதிகமாக, சகல சாதாரண மருத்துவச் சிட்டைகளும் மற்றும் வைத்தியசாலைச் சிட்டைகளும் மீள்நிரப்பப்படும். இதற்கு மேலதிகமாக, ஒரு வருடத்திற்கு பத்து பேருக்கு ஒரு மில்லியன் ரூபா வரை கடுமையான சுகவீனக் காப்பீட்டுக்காகவும், ஆயுள் காப்பீட்டுக்காகவும் குழு ஆயுள் காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது ஊழியர்களின் நன்மைக்காக நிறுவனத்தினால் வழங்கப்படும் மிகவும் முக்கியமான சேவையொன்றாகும்.

தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை, தே.வி.மு.நி.இன் பட்டப் பாடசாலை

தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை (தே.வி.மு.பா.)

தே.வி.மு.பா பசுமைப் பல்கலைக்கழகப் பட்டினத்தில் அபிவிருத்தியுடன், கல்வியின் ஊடாக சுபீட்சமான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதன் மூலம், எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் சரியான திசை மீது நிறுவனத்தின் மூலோபாய நோக்கம் உருவாக்கப்பட்டுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

மந்திரிகளின் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், 2007இன் இல.07 கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2011 ஒக்ரோபர் 7 அன்று தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை தாபிக்கப்பட்டது. அது தே.வி.மு.நி.இன் பட்டம் வழங்கும் பாடசாலை என்பதுடன். இலங்கையின் பிரதான வியாபாரக் கல்வி நிறுவனமுமாகும். வியாபாரம், கணித்தல் மற்றும் எந்திரவியல் ஆகிய துறைகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்டத்திற்குப்பிந்திய படிப்பு ஆகியவற்றை வழங்கி ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் உயர்ந்தளவில் மதிப்புவாய்ந்ததும், உலகளாவியரீதியில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளதுமான பல்கலைக்கழகங்களுடனும், பட்டம் வழங்கும் நிறுவனங்களுடனும் நீண்ட காலப் பங்காண்மையை தே.வி.மு.பா. விருத்தி செய்துள்ளது. அதன் தொலைநோக்குக் கூற்றில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதற்கு மிகவும் முக்கியமான வியாபாரப் பாடசாலையாகத் தாபிக்கப்பட்டுள்ளது. கல்வி, கற்கை மற்றும் ஆராய்ச்சி ஆகியன ஊடாக சுபீட்சமான சமூகமொன்றைக் கட்டியெழுப்புதவற்கான குறிப்பிடத்தக்க பங்களிப்பொன்றைக் குறித்துக்கொண்டு, பின்வரும் பெறுமதிகளினால் தே.வி.மு.பா. வழிகாட்டப்படுகின்றது:

- வாழ்க்கையின் உருமாற்றத்தில் ஈடுபடுதல்
- நூற்கல்வித் திறமையைச் சாதித்தல்
- ஆராய்ச்சி முனைப்பாக்கம்
- உலகம்பூராவும் வலைப்பின்னலமைப்பு
- ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புக்கூறுதல்
- புதுமாற்றத்தையும், மாற்றத்தையும் போஷித்தல்

'மஹிந்த சிந்தனையில்' வலியுறுத்தப்பட்டவாறு, ஆசியாவின் 'அறிவுக் கூடம்' ஒன்றாக இருப்பதற்கு இலங்கையை உருமாற்றும் தொலைநோக்கினால் தூண்டப்பட்டு, ரூ.8.6 பில்லியன் கொண்ட கடனொன்றுக்காக இலங்கை வங்கியிடமிருந்து அங்கீகாரத்தை வெற்றிகரமான அடைந்த பின்னர், 2013 டிசம்பர் 18 அன்று தே.வி.மு.பா. பசுமைப் பல்கலைக்கழக பட்டினத்தின் நிருமாணத்தை தே.வி.மு.பா. உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது. தென் ஆசியாவில் அதன் வகையிலானதாக அது முதலாவதாக இருப்பதனால், ஹோமாகம, பிட்டிபானவில் 26 ஏக்கர் காணியொன்றில் அமைந்துள்ளது. சகல வசதிகளுடனான இந்த நவீன பல்கலைக்கழகம் மாணவர்களினதும், நூற்கல்வியாளர்களினதும் உடல்ரீதியானதும், உளவியல்ரீதியானதுமான சௌகரியத்திற்கு ஈடுகொடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. நடைமுறையிலான பௌதீக மற்றும் இயற்கையான சூழலுடன் கட்டமைப்பு இசைவுறுகின்றது. அதன் சூழல் நட்புறவிலானதும், பிந்திய தொழில்நுட்பத்துடனும், நவீன பொருட்களுடனும் கட்டப்பட்டுள்ளதினால் குறைந்தளவு பராமரிப்பு முயற்சியொன்றையே வேண்டுகின்றது. இவை யாவும் ஒரே அமைவிடத்தில் சூழவிருப்பதனால், அது யாரேனும் மாணவரின் பெருமையாக விளங்கும் என்பதுடன், 2016க்குள் பல்கலைக்கழகத்தின் இந்த கட்டிடக்கலையிலான சிறந்த சாதனையை உத்தியோகபூர்வமாகத் திறப்பதற்கு தே.வி.ம.பா. ஆர்வத்துடன் உள்ளது.

பிட்டிபானவில் நிருமாணங்கள் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கும் வேளை, கணித்தல் பாடசாலைக்கான அதன் புதிய பிரிவை 2013 செப்ரெம்பர் 20 அன்று நுகேகொடை, அனுலா வித்தியாலயத்திற்கு சரியாக முன்பாக தே.வி.மு.பா. நகர வளாகமும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எமது கணித்தல், மல்ரிமீடியா மற்றும் உள்ளக வடிவமைப்பு மாணவர்களுக்கு அவசியமான சகல பிந்திய சாதனங்களை, அதாவது கேட்போர்கூடம், கணனி ஆய்வுகூடங்கள், பல்-செயற்பாட்டிலான மாணவர் ஓய்விடம் மற்றும் தரைக்கீழ் உணவகம் ஆகியவற்றை இக் கட்டிடம் கொண்டுள்ளது.

மேலும், சகல அதன் பங்காளர்கள், பணிப்பாளர் சபையினர், நூற்கல்வி ஆளுனர் சபையினர் மற்றும் ஆளுனர் சபை உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட தே.வி.மு.பாடசாலையின் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டத்தை விருந்தோம்புவதை இவ்வருடம் கண்டது.

மேலதிகமாக, மிகவும் மேன்மைமிக்க கல்விசார் தத்துவமளிக்கப்பட்ட உறுப்பொன்றான AACSBஇன் உறுப்புரிமையைக் கொண்டிருப்பதற்கான இலங்கையில் பெருமைமிக்க இரண்டாவது உறுப்பினராக தே.வி.மு.பா. தற்போது விளங்குகின்றது. இது தே.வி.மு.பாடசாலையில் பட்ட சான்றுப்பத்திரங்களுக்கு அதிகளவு முக்கியத்துவத்தையும், பெறுமதியையும் நிச்சயமாகச் சேர்த்துக்கொள்ளும்.

UGCஇனால் அங்கீகரிக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதே தே.வி.மு. பாடசாலையின் மிகவும் புதுமையான அம்சங்களில் ஒன்றாகும் என்பதுடன், இவ்வருடம் UGCஇனால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார முகாமைத்துவத்தில் (விசேட) பீ.எஸ்சி மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகளில் (விசேட) பீ.எஸ்சி ஆகியவற்றின் அதன் ஆரம்பத்திலான பட்டமளிப்பினை, இலங்கை ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி அதிமேன்மைதங்கிய மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவின் கீழ் 2014 ஜனவரி 29 அன்று தே.வி.மு.நி. பெருமிதத்துடன் வழங்கியது. இதைத் தொடர்ந்து, முகாமைத்துவத்திலும், கணித்தலிலும் UGCஇனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்திற்குப் பிந்திய நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதில் மேலும் ஒரு நடவடிக்கையை தே.வி.மு.பா. எடுத்தது.

கணித்தல் பாடசாலை, வியாபாரப் பாடசாலை மற்றும் எந்திரவியல் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளை தே.வி.மு.பா. கொண்டுள்ளது. சகல மூன்று நிபுணத்துவம் பெற்ற பிரிவுகளும் அயர்லாந்தின் டப்ளின் பல்கலைக்கழகக் கல்லூரி, மலேஷியா லிம்கொக்விங் பல்கலைக்கழகம் மற்றும் பிளிமவுத் பல்கலைக்கழகம் ஆகிய வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் பங்காண்மைகளைத் தாபித்துள்ளன. வியாபார முகாமைத்துவம், முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், சட்டம், கணக்கியல் மற்றும் மேலும் பல என பலதரப்பட்ட பட்டத் தெரிவுகளை வியாபாரப் பாடசாலை வழங்குகிறது. கணனி விஞ்ஞானத்தில் நவீன கலைத்துவமான நிபுணத்துவங்களின் சிறந்த கலப்பொன்றுடன் பட்டப்படிப்பு, பட்ட மற்றும் பட்டத்திற்குப் பிந்திய மட்டங்களில் பன்னிலையிலான நிகழ்ச்சித்திட்டங்களைக் கணித்தல் பாடசாலை வழங்குகிறது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், பணியாளர் பயிற்சி மற்றும் சர்வதேச சனசமூகங்களுடன் வலைப்பின்னமைப்பு ஆகியன ஊடாக, முதற்தர தொழில்நுட்பங்களுக்கு அமைவாக கணனி எந்திரவியல் மற்றும் இலத்திரனியல் ஆகியவற்றின் பட்ட பயிற்சிநெறிகளை எந்திரவியல் பாடசாலை வழங்குகின்றது. வரலாற்றில் ஒரு சில மாதங்களை மட்டுமே தே.வி.மு.பா. கொண்டிருக்கின்ற போதிலும், தாய் நிறுவனமான தே.வி.மு. நிறுவனமானது இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் வரம்பின் கீழ் 1968இல் தாபிக்கப்பட்டது. இலங்கையில் முதன்மையான பயிற்சி நிறுவனமானது கல்வி, உசாவுகை மற்றும் பயிற்சி ஆகியவற்றின் ஊடாக தேசத்திற்கு மாபெரும் சேவையொன்றை வழங்கி, நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையின் வேலைப் படையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தியுள்ளது.

தொலைநோக்கு

எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதற்கு முதன்மையான வியாபாரப் பாடசாலையாகவிருத்தல்

செயற்பணி

கல்வியினதும், கற்கையினதும் மற்றும் ஆராய்ச்சியினதும் ஊடாக சுபீட்சமான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு பங்களித்தல்

குறிக்கோள்கள்


- உள்ளூர்ரீதியாகவும், சர்வதேசரீதியாகவும் கிராக்கியைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதல்
- புதுமாற்றத்தில் தேசிய மற்றும் சர்வதேச மேலாண்மையைச் சாதித்தல்
- கைத்தொழில் மற்றும் உலகளாவிய அறிவு மையங்களுடன் இணைப்பு
- தேசத்தின் புலமைசார், கலாசார மற்றும் சமூக விருப்பார்வங்கள் ஆகியவற்றை சாதிப்பதற்கான உகந்த சூழலொன்றை விருத்திசெய்தல்
- நிறுவனரீதியிலான கூட்டாண்மை வளர்ச்சியை தொடர்ச்சியாக மேம்படுத்தல்

“ பச்சைப் பல்கலைக்கழக நகரம்”

இலங்கையில் அதன் வகையில் முதலாவது







விசேட நிகழ்ச்சிகள் - 2014

டிப்ளோமா வழங்கல் வைபவம் - 2014

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் 2014 செப்ரெம்பர் 9 அன்று டிப்ளோமா வழங்கல் வைபவம் நடைபெற்றது.





மனித வள அரங்கு 2014





தேசிய வியாபார முகாமை நிறுவனம் அதன் முதலாவது மனித வள அரங்கை தே.வி.மு.நி. இடப்பரப்பில் மார்ச் 07 அன்று நடத்தியது. மனித வள வாழ்க்கைத்தொழில் புரிபவர்கள், ஆலோசகர் மற்றும் மனித வள துறையைச் சேர்ந்த பயிற்றுனர்கள் ஆகியோரின் பங்கெடுப்புடன் நிகழ்ச்சி முக்கியமான வெற்றியொன்றை அடைந்தது. மனித வள வாழ்க்கைத்தொழில்புரிபவர்களின் திறமைகளினதும், இலங்கையின் தாபனரீதியிலான சூழமைவில் எதிர்கால மனித வளச் சவால்களினதும் மீது கூடியிருந்தோர் விசேடமாக நோக்கினைக் கொண்டிருந்தனர். பெருமளவு பெறுமதிமிக்க மனித வளத்தின் பூரணஅறிவுடன் இது பயனுள்ள அரங்கொன்றாக விளங்கியது.

சிறந்த சொற்பொழிவாளர் 2014





தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் ஆங்கில அலகு அதன் முதலாவது "சிறந்த சொற்பொழிவாளர்" போட்டியை தே.வி.மு.நி. கேட்போர்கூடத்தில் 2014 ஜூன் 25 அன்று நடத்தியது. தமது சொற்பொழிவு மற்றும் சமர்ப்பணத் திறன்களை வெளிக்காட்டுவதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பொன்றை வழங்குவதற்காக இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

தே.வி.மு.நி. குரல் - 2014





தே.வி.மு.நி.இன் நலன்புரி சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்படும் மிகப் பெரிய நிகழ்வுகளில் ஒன்று தே.வி.மு.நி. குரல் ஆகும் என்பதுடன், இது 2014 ஏப்ரல் 5 அன்று நடத்தப்பட்டது. தே.வி.மு.நி.இன் சக்திக்குக் குரல் கொடுப்பதற்காக தே.வி.மு.நி. மாணவர்களுடன் மேடையில் பாத்தியாவும், சந்தோஷும் இருந்தனர். இதை ஒரு குறிப்பிடத்தக்கதும், நினைவுகூரத்தக்கதுமான மாலையொன்றாக தே.வி.மு.நி. மாணவர்களினதும், பெற்றோர்களினதும் பாரிய ஒன்றுகூடலொன்று செய்தது.

டிப்ளோமா அங்குரார்ப்பண வைபவம் - 2014

தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் டிப்ளோமா அங்குரார்ப்பண வைபவம் ப.ஞா.ச.ம.மண்டபத்தில் 2014 மார்ச் 06 அன்று நடைபெற்றது. டிப்ளோரா அங்குரார்ப்பணத்தில் வட்டவள பிளான்டேஷன்ஸ் PLCஇன் தலைவரும், யுனைற்ரெட் மோட்டார்ஸ் லங்கா PLCஇன் தலைவருமான திரு.சுனில் ஜி.விஜேசிங்க முக்கிய சொற்பொழிவாளராக விளங்கினார்.





வெசாக் தம்ம போதனை மற்றும் இரவு முழுவதிலுமான பிரித் வைபவம்

2014ஆம் ஆண்டின் போது இரவு முழுவதும் பிரித் வைபவம் தே.வி.மு.நி. தலைமையலுவலகத்தில் நடந்ததுடன், அதைத் தொடர்ந்து சங்கத்திற்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. வெசாக் முழு நோன்மதி தினம் தொடர்பாக பணியாளர்களினதும், மாணவர்களினதும் பங்கெடுப்புடன் தம்ம உபதேசமொன்று ஒழுங்குசெய்யப்பட்டது.





சிங்கப்பூரில் வருடாந்தச் சுற்றுலா மற்றும் ஒன்றுகூடல்

பணியாட் உறுப்பினர்களும், அவர்களது குடும்பத்தினரும் 2014 ஏப்ரல் 17, 18 மற்றும் 19இல் சிங்கப்பூருக்கான சுற்றுலா ஒன்றிலும், ஒன்றுகூடல் ஒன்றிலும் பங்கெடுத்தனர். சுற்றுலாவும், ஒன்றுகூடலும் தே.வி.மு.நி. நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்படும் வருடாந்த நிகழ்வுகளாகும்.

கூட்டாண்மை சமூகப் பொறுப்பு

நீர் மற்றும் நிலம் போன்ற இயற்கை வளங்களை நாம் பயன்படுத்துவதனாலும், சூழலுக்கு கழிவை விடுவிப்பதனாலும் எமது தாபனத்தின் முக்கியமான அம்சமொன்றாக கூட்டாண்மை சமூகப் பொறுப்பை நாம் கரிசனைக்கெடுக்கின்றோம். முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கல்வி, வாழ்க்கைத்தொழில் பயிற்சி மற்றும் உசாவுகை ஆகியவற்றை வழங்குவதே எமது வியாபாரம் என்பதனால் சகல செயற்பாடுகளிலும் எமது மாணவர்களும் பங்கெடுப்பாளர்களும் தம்மை ஒழுங்குபடுத்துவது முக்கியமானது என்பதையிட்டு நாம் உணர்வுப்பூர்வமாக உள்ளோம். ஆகக்குறைந்த மறுதலையான தாக்கங்களை முன்வைக்கும் தூய்மையானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை நாம் பேணுகின்றோம். எமது மனிதவள கொள்கைகள் ஊடாக எமது ஊழியர்களின் சேமநலனையும் தனிப்பட்ட நன்மையையும் நாம் கவனிக்கின்றோம். எனவே, தரத்திலான பணி ஊடாக தரத்திலான வாழ்க்கையைக் கொண்டிருப்பது மீது எமது நடத்தையும் செயற்பாடுகளும் நோக்கினைக் கொண்டுள்ளன.

நிதிசார்ரீதியில் குறைந்த சிறப்புரிமை கொண்டிருந்தும் திறமையைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் சேவையையும், இலவசமான கருத்தரங்குகளையும் மற்றும் புலமைப்பரிசில்களையும் நாம் பங்களித்துள்ளோம். சிறந்த சொற்பொழிவாற்றாளர் - 2014 மற்றும் கிராமிய பாடசாலைகளில் உள்ள நூலகங்களுக்கு நூல்களை நன்கொடை செய்தல் ஆகியன எமது தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு நேரடியான தொடர்பினைக் கொண்டுள்ளன.


2014ஆம் ஆண்டில் பின்வரும் நன்கொடைகளை தே.வி.மு.நி. செய்துள்ளது:

- ஆராய்ச்சி துறையின் முன்னேற்றத்திற்காக பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் பிரிவின் மாணவர் ஒருவருக்கு மடிக்கணனி ஒன்று நன்கொடையாக வழங்கப்பட்டது.
- வட மேல் மாகாணத்தில் உள்ள கிரியுல்ல வலய கிராமியப் பாடசாலையில் எலிவிச்சிய பாடசாலைக்கு சங்கீத கருவிகளும் மற்றும் கல்விசார் விடயங்களும் நன்கொடையாக வழங்கப்பட்டன.
- தேசிய வியாபார முகாமை நிறுவனத்தைச் சேர்ந்த திரு.பி.எ.சமரசிங்கவின் இருதய சத்திரசிகிச்சைக்கு நன்கொடையொன்று வழங்கப்பட்டது.
- கண்டி மாவட்டத்தில் மகாபத்தன கனிஷ்ட பாடசாலைக்கு அப்பியாசக் கொப்பிகளும், காகிதாதி விடயங்களும் வழங்கப்பட்டன.
- கண்டி மாவட்டத்தில் வயோதிபர் இல்லத்துக்காக வயதானவர்களுக்கு உணவுகளும், உடைகளும் வழங்கப்பட்டன.
- ஆண்டின் போது தே.வி.மு.நி. தலைமையலுவலகத்தாலும் மற்றும் குருநாகல், கண்டி மற்றும் காலி பிராந்திய நிலையங்களினாலும் இரத்ததான திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டன.

சாதனைகள் - 2014

ISO 9001: 2008 சான்றுப்பத்திரம்

சர்வதேச நியமங்களின் பிரகாரம் 2008ஆம் ஆண்டின் போது அதன் கொள்கைகளையும், திட்டங்களையும் அமுலாக்கியதன் விளைவொன்றாக, 2009இல் நிறுவனத்திற்கு ISO 9001: 2008 சான்றுப்பத்திரம் வழங்கப்பட்டது. எனவே, அதன் நோக்கங்களைச் சாதிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட அதன் திட்டங்களை அமுல்படுத்துவதில் செயற்றிறனுக்கும், செம்மைத்தன்மைக்கும் நிறுவனத்தின் பணியாளர் அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளார்கள் என்பது கண்கூடானதாகும்.


SGS

Certificate SG09/02538

The management system of

National Institute of Business Management

No:120/5,Wijerama Mawatha, Colombo 07, Sri Lanka

has been assessed and certified as meeting the requirements of

ISO 9001:2008

For the following activities

Offering short term and long term Professional certification courses including Diploma and Higher Diploma

Further clarifications regarding the scope of this certificate and the applicability of ISO 9001:2008 requirements may be obtained by consulting the organisation

This certificate is valid from 1 September 2012 until 31 August 2015 and remains valid subject to satisfactory surveillance audits.
Re certification audit due before 31 July 2015
Issue 2. Certified since 1 September 2009

Authorised by

SGS United Kingdom Ltd Systems & Services Certification
Rossmore Business Park Ellesmere Port Cheshire CH65 3EN UK
t +44 (0)151 350 6666 f +44 (0)151 350 6600 www.sgs.com

SGS 0014 01 0311

Page 1 of 1

UKAS MANAGEMENT SYSTEMS 005

தே.வி.மு.நி.க்கான உற்பத்தித்திறன் விருது



உயர் தரத்திலான உற்பத்தித்திறனைச் சாதிக்கும் அதன் நோக்கங்களுக்கு பின்தொடராக முறைமையானதும், செயற்றிறனானதுமானதன்மையை அங்கீகரித்து, 2010ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் வைபவத்தில் திறமைச் சான்றுப்பத்திரமொன்று நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

தேசிய வியாபாரத் திறமை விருதுகள் 2014



2014ஆம் ஆண்டில் இலங்கை தேசிய வர்த்தக சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய வியாபார திறமை விருதுகள் வைபவத்தில் அரசாங்கச் சேவைத் துறைக்கான இரண்டாவது இடத்தை தேசிய வியாபார முகாமை நிறுவனம் பெற்றுள்ளது.

புதிதாகத் திறக்கப்பட்ட மாத்தறை பிராந்திய நிலையம்

2014இல் தே.வி.மு.நி. மாத்தறை பிராந்திய நிலையம் திறக்கப்பட்டதுடன், இது நவீனமான கணனி ஆய்வுகூடங்கள், நூலகம், கற்கைப் பகுதிகள் மற்றும் சௌகரியமான விரிவுரை அறை வசதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. உண்மையில் இவ்வசதி நவீனமான கல்விசார் வசதியென்பதுடன், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், மனித வள முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் விரிவான போதனைரீதியான வசதியையும் வழங்குகின்றது. உயர் தர, சாதாரண தர மாணவர்களுக்கும், வேலைசெய்யும் வாழ்க்கைத்தொழில்புரிபவர்களுக்கும் டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும் சான்றுப்பத்திர மட்டப் தகைமைகளை புதிய தே.வி.மு.நி. மாத்தறைப் பிராந்திய நிலையம் வசதியளிக்கும்.

எதிர்காலத் திசைகள்

துறையில் என்றுமே அதிகரிக்கின்ற போட்டியாளர்களுக்கு முகங்கொடுப்பதற்காக, பின்வரும் உந்துகைத் துறைகள் அடையாளங்காணப்பட்டுள்ளன:

1. நிலைத்திருக்கத்தக்க பிரவேசத்துடனும், வெளியேற்ற முனைகளுடனும் சகல அதன் மாணவர்களுக்கு முழுமையான தொழில் பாதையொன்றை தே.வி.மு.நி. வழங்கும் - எளிய சான்றுப்பத்திரத் திட்டமொன்றிலிருந்து உயர் டிப்ளோமா மட்டத் திட்டங்கள் வரை

2. பிராந்திய நிலையங்களில் விஸ்தரிப்பினையும் மற்றும் கொள்ளளவையும் மேம்படுத்தல்

3. முகாமைத்துவம் தொடர்பிலான உசாவுகைச் சேவை அலகுகளையும், முகாமைத்துவ தகவல் முறைகளையும் தாபித்தல்

4. உட்கட்டமைப்பு வசதிகளையும், சாதனங்களையும் மேம்படுத்துவதற்காக தே.வி.மு.நி. தலைமையலுவலகக் கட்டிடத்தைப் புதுப்பித்தல்

5. கொழும்பிலும் மற்றும் பிராந்திய நிலையங்களிலும் எமது வாடிக்கையாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் உலகத் தரத்திலான கற்கை, பொழுதுபோக்கு மற்றும் உணவக வசதிகளை வழங்குதல்

6. மனித வளத்திற்கும், நிருவாகத்திற்கும் நடைமுறை கையேட்டினை விருத்திசெய்தல்

7. அதே அரசாங்க தாபனத்திற்கும், போட்டியாளர்களுக்கும் பொருந்தக்கூடியதாக சகல பணியாளருக்கும் சம்பள மீளாய்வு

8. மாணவர்களுக்கு இலகுவானதும், வெளியேற்றத்திலானதும் முனைகளை வழங்கும் உத்தேசமான முழுமையான தொழில் பாதையின் முன்னேற்றத்திற்குப் பொருந்தக்கூடியதாக நடைமுறையிலான சான்றுப்பத்திர மற்றும் டிப்ளோமா திட்டங்களை மதிப்பாய்தலும், புதுப்பித்தலும்

9. எமது உற்பத்திகளினதும், சேவைகளினதும் தரத்தையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்தல்

10. வெளியீடுகளும், சஞ்சிகைகளும்

    - உள்ளக காலாண்டு/வருடாந்த சஞ்சிகை

    - டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா மாணவர்களின் தரத்திலான காலாண்டு கருத்திட்ட அறிக்கைகள்

11. ஆதரவுச் சேவைகளின் தொழிற்பாட்டிலான வினைதிறனை மேம்படுத்தல்.

பிரிவுசார் கட்டமைப்பு

இலங்கையின் அரசாங்க மற்றும் தனியார் துறையிலிருந்தும் அத்துடன் வேறு நாடுகளிலிருந்தும் பெறப்பட்ட அதன் பெறுமதியான வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ள விதத்தில் ஈடுகொடுப்பதற்காகவும், தேசிய மற்றும் சர்வதேச நியமங்களின் திறன்களையும், ஆற்றலளவுகளையும் கொண்ட வேலைப்படையொன்றை விருத்தி செய்வதற்காகவும் இரு பிரிவுகளாக அதன் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளை நிறுவனம் கட்டமைத்துள்ளது. பாரிய பிரிவுகள் வருமாறு:

- உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு
- முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவு

உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு

உற்பத்தித்திறன் மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி ஆகியவற்றில் பலதரப்பட்ட திட்டங்களுடன் அதன் சேவைகளை உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு வழங்குகின்றது.

- பொது முகாமைத்துவத் திட்டங்கள்
- மனி வள முகாமைத்துவம்
- வியாபார முகாமைத்துவம்
- உற்பத்தித்திறன், தர மேம்படுத்தல் திட்டங்கள்
- உசாவுகைச் சேவைகள்
- மொழித் திட்டங்கள்
- கணனி பிரயோகத் திட்டங்கள்
- அளவெடுத்து ஆக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்

வியாபாரத் தாபனங்களிலும், மற்றும் தனிப்பட்டவர்களிலும் உற்பத்தித்திறனையும், முகாமைத்துவச் செயற்பாடுகளையும் வசதியளிப்பதும், திருத்தியமைப்பதுமே அதன் பிரதான நோக்கமாகும். பயிற்சி, கல்வி மற்றும் உசாவுகைச் சேவைகள் போன்ற துறைகளில் பலதரப்பட்ட வகையிலான உற்பத்திகளை இப் பிரிவு வழங்குகின்றது. பாடசாலையிலிருந்து வெளியேறியோரிலிருந்து உயர்வான வாழ்க்கைத் தொழில்புரிபவர்கள் வரை வேறுபடுகின்ற சமூகத்தின் குறுக்குவெட்டுமுகமொன்றுக்கு அதன் சேவைகள் கிட்டுகின்றன. அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் உள்ள அக்கறையைக் கொண்ட தனிப்பட்டவர்களுக்கும் மற்றும் தாபனங்களுக்கும் இந்தக் கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள் சிபார்சு செய்யப்படுகின்றன.

கடந்து போன தசாப்தங்களில், இலங்கையில் உள்ள அரசாங்க மற்றும் தனியார் துறை தாபனங்களுக்கு உற்பத்தித்திறன் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதில் தே.வி.மு.நி. முன்னணியில் திகழ்கின்றது. அண்மையில், மந்தமான தயாரிப்பு மற்றும் ஆறு சிக்மா முறைமைகள் என அழைக்கப்பட்ட உலகப் பிரசித்தமான உற்பத்தித்திறன், தர மேம்படுத்தல் முறைமைகளை பிரிவு அண்மையில் ஆரம்பித்துள்ளது. மந்தமான மற்றும் ஆறு சிக்மா முறைமைகளைப் பயன்படுத்தி தரத்தையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்துதல் மீது இலங்கையில் உள்ள பாரிய எண்ணிக்கையிலான கைத்தொழில்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளன.

அதன் உசாவுகைப் பணியை நடத்துவதில் உயர் மட்டத்திலான வாழ்க்கைத்தொழில் தன்மையை பிரிவு பராமரிக்கின்றது. சகல சம்பந்தப்பட்ட உண்மைகளினதும், கருத்துக்களினதும் நோக்கத்திலான பகுப்பாய்வொன்றின் மீது சுதந்திரமான கருத்தொன்றிலிருந்து எமது உசாவலர்களின் ஆலோசனை விளங்கும். உள்ளக மற்றும் வெளியார் வாழ்க்கைத்தொழிலைப்புரிபவர்களைக் கொண்டுள்ள தே.வி.மு.நி. உசாவலர்களின் குழாம் ஏதாவது உசாவுகைக் கருத்திட்டத்தைக் கையாள்வதற்கு அவசியமான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவத் திறன்களையும், அத்துடன் செழுமையான அனுபவத்தையும், வெளிப்படுத்தலையும் கொண்டுள்ளது.

முகாமைத்துவத் திட்டங்கள்


2014 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான காலத்தின் போது, உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு 99 திட்டங்களை நடத்தியுள்ளது. இத் திட்டங்கள் 02 உயர் டிப்ளோமா திட்டம், 20 உயர்தர டிப்ளோமா திட்டங்கள், 04 டிப்ளோமா திட்டங்கள், 27 உயர்தர சான்றுப்பத்திரத் திட்டங்கள், 15 சான்றுப்பத்திரத் திட்டங்கள், 06 அடிப்படைத் திட்டங்கள், 15 உள்வீட்டுத் திட்டங்கள் மற்றும் 10 குறுகிய காலத் திட்டங்கள் ஆகியவற்றை கொண்டுள்ளன.

2013ஆம், 2014ஆம் ஆண்டுகளின் போது உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட திட்டங்களின் சாராம்சமொன்றை பின்வரும் அட்டவணை வழங்குகின்றது.

	வகுதி	2013		2014	
		பயிற்சிநெறி களின் எண்.	பங்கெடு ப்பாளர் களின் எண்.	பயிற்சிநெறி களின் எண்.	பங்கெடு ப்பாளர் களின் எண்.
1	உயர் டிப்ளோமா திட்டங்கள்	1	178	2	395
2	உயர்தர டிப்ளோமா திட்டங்கள்	20	1396	20	1191
3	டிப்ளோமா திட்டங்கள்	4	114	4	89
4	உயர்தர சான்றுப்பத்திர திட்டங்கள்	27	1,197	27	1,007
5	சான்றுப்பத்திர திட்டங்கள்	18	550	15	489
6	அடிப்படைத் திட்டங்கள்	8	336	6	224
7	குறுகிய காலத் திட்டங்கள்	17	359	15	381
8	உள் வீட்டுத் திட்டங்கள்	11	248	10	228
	மொத்தம்	**106**	**4,378**	**99**	**4,004**

அட்டவணை 04: உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட திட்டங்கள்

முகாமைத்துவத் தகவல் முறைமை பிரிவினால் நடத்தப்பட்ட திட்டங்கள்



உருபு 04 - உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள்

உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்தித் திட்டங்களில் பங்கெடுப்பு

2014ஆம் ஆண்டின் போது, உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவின் திட்டங்களில் மொத்தமாக 4,004 பேர் பங்கெடுத்தார்கள். இத்தொகையில் உயர் டிப்ளோமா திட்டங்களில் 395 பேர், உயர்தர டிப்ளோமா திட்டங்களில் 1,191 பேர், டிப்ளோமா திட்டங்களில் 89 பேர், உயர்தர சான்றுப்பத்திர பயிற்சிநெறிகளில் 1,007 பேர், சான்றுப்பத்திர பயிற்சி நெறிகளில் 489 பேர், அடிப்படைப் பயிற்சிநெறிகளில் 224 பேர், குறுகிய காலத் திட்டங்களில் 609 பேர் பங்கெடுத்தனர்.

உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்தித் திட்டத்தின் அபிவிருத்தி முயற்சிகள்

தனியார் துறை வாடிக்கையாளர்களுக்கு ஈடுகொடுப்பதற்கு பயிற்சித் திட்டங்களை விருத்தி செய்வதற்கு பலதரப்பட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதன் பிரகாரம், இவ்வருடத்தின் போது ஒரு சில புதிய பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்தத் திட்டங்களில், உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள் முக்கியமானவையாகும். இவ்வருடத்தின் போது, ஆங்கில மொழி பயிற்சி மீது பெருமளவு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. புதிய திட்டங்களை முன்னேற்றுவதற்கு உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் எடுக்கப்பட்ட பெருமளவு நடவடிக்கைகள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

- வாடிக்கையாளர் மதிப்பீட்டு முறைமை தாபிக்கப்பட்டு, விருத்திசெய்யப்பட்டது.
- வாடிக்கையாளர்களின் புதுப்பிக்கப்பட்ட தரவு வங்கியைப் பராமரித்தல், மற்றும் அவற்றின் மத்தியில் நிறுவனத்தின் மதிப்பை மேம்படுத்தல்.
- புதிய விளம்பரப்படுத்தல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல்.
- வாடிக்கையாளரின் தேவைகளை நிறைவேற்றும் திட்டங்களை முன்னேற்றுதல்.
- உள்ளகப் பயிற்சித் திட்டங்கள் மீது விசேட கவனத்தை நோக்காகக் கொண்டிருத்தல்.

ஆங்கில மொழி அலகு

2006 நொவம்பரில், ஒரு முழு நேர உசாவலருடன் ஆங்கில மொழி அலகு தாபிக்கப்பட்டதுடன், இது தற்போது உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரின் கீழ் இயங்குகின்றது. சகல வகைகளான பயிலுனர்களுக்கு ஆங்கில மொழித் திறன்களில் தகுதிகளைக் கட்டியெழுப்புவதற்கான மரியாதையொன்றை தே.வி.ம.நி. ஈட்டியுள்ளதுடன், தனியார் மற்றும் அரசாங்கத் துறைகளின் ஊழியர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சிநெறிகளையும், அத்துடன் உள்ளக ஆங்கில மொழி பயிற்சிநெறிகளையும் வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

தரமான ஆங்கிலப் பயிற்சிநெறிகளுக்கான என்றுமே வளர்ச்சியுறும் கிராக்கிக்கு பதிலிறுப்பாக, ஆங்கில மொழியின் உபயோகத்தில் தேர்ச்சியடைவதற்காக பங்கெடுப்பாளர்களை இயலச்செய்வதற்காக சான்றுப்பத்திர மட்டத்திலிருந்து டிப்ளோமா மட்டம் வரை பெருமளவு பயிற்சிநெறிகளை ஆங்கில அலகு வடிவமைத்துள்ளது. இப்பயிற்சிநெறிகள் வெற்றிகரமான தொழிலொன்றுக்கு உறுதியான அடித்தளமொன்றாக தமது ஆங்கில மொழி தகுதிகளை மேம்படுத்துவதை நாடுபவர்களுக்கு பொருத்தமானவையாகும். இரண்டாவது மொழியாக கற்கும் சகல வகைகளையும் கொண்டவர்களைக் கையாள்வதில் பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ள வெளிநாட்டு வெளிப்படுத்தலுடன் அனுபவம் வாய்ந்ததும், நன்கு தகைமை வாய்ந்ததுமான வள நபர்களின் சேவைகளை ஆங்கில அலகு கொண்டுள்ளது. தொடர்பாடலின் ஊடகமொன்றாக ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் கற்பவர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு அவர்களது நிபுணத்துவ வழிகாட்டல் முக்கியமானதாகும். ஆங்கிலத் தகுதிகளில் பயிற்சி வழங்குனராக கைத்தொழிலுக்கும், நாட்டுக்கும் புதிய ஆங்கில மொழி அலகு சேவையாற்றுவதுடன், ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மொழிகளில் மொழி அபிவிருத்தி பயிற்சிநெறிகளை நடத்துவதற்காக விஸ்தரிப்பதற்கான திட்டங்களைக் கொண்டுள்ளது.

வருமானத் தோற்றுவிப்பு


2014ஆம் ஆண்டின் போது உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு ரூபா 272 மில்லியனைக் கொண்ட வருமானத்தை சம்பாதித்தது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவின் வருமானத்தில் கணிசமானளவு அதிகரிப்பொன்றுள்ளதை கீழே உள்ள வரிப்படம் எடுத்துக்காட்டுகின்றது.

தோற்றுவிக்கப்பட்ட வருமானம் - உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு

ரூ. மில்லியன்

	2010	2011	2012	2013	2014
உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்	216	327	232	253	272

அட்டவணை 05 - உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்



உரு 05 - உற்பத்தித்திறன், முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்

முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவு

தகவல் தொழில்நுட்பத் துறையில் தகைமைகளையும், பயிற்சியையும் வழங்கும் முன்னோடி கணனி-பயிற்சி நிறுவனமாக தே.வி.மு.நி. விளங்குகின்றது. தொழிலைப் பெறுவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளை ஈட்டுவதற்கும் அவசியமான திறன்களைப் பங்கெடுப்பாளர்களுக்கு வழங்குவதற்கு கணனித் திட்டங்களை பிரிவு நடத்துகின்றது. புதுமையான தொழிற்றுறை தேவைகளுக்கு ஈடுகொடுப்பதற்காக பயிற்சிநெறி மட்டிசைப்புகள் தொடர்ச்சியாக மீளவாயப்படுகின்றன.

உயர் டிப்ளோமாத் திட்டங்களையும், டிப்ளோமாத் திட்டங்களையும், பெருமளவு சான்றுப்பத்திர மட்ட திட்டங்களையும் பிரிவு வழங்குகின்றது. கணனி முறைமைகள் வடிவமைப்பில் ஒரு வருட டிப்ளோமாவையும், கணனி அடிப்படையிலான தகவல் முறைமைகளில் உயர் டிப்ளோமாவுக்கு இட்டுச் செல்லும் இரு வருட திட்டத்தையும், பிரதான பயிற்சித் திட்டங்கள் கொண்டுள்ளன. இந்த நன்கு-கட்டமைக்கப்பட்ட கணனிப் பயிற்சித் திட்டங்கள் மாணவர்கள் மத்தியில் பரந்த ஏற்றுக்கொள்ளலை ஈட்டியுள்ளதுடன், இங்கும், வெளிநாடுகளிலும் தொழில் வழங்குனர்களினால் அங்கீகரிக்கப்படுகின்றன.

2006 மே முதல், சர்வதேச கணனி செலுத்தல் உத்தரவுப்பத்திர பயிற்சிக்கான சான்றுப்படுத்தப்பட்ட சோதனை நிலையமொன்றாக மு.த.மு. பிரிவு விளங்குகின்றது. 2008ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பிரிவினால் வழங்கப்பட்ட கல்வியினதும், சேவைகளினதும் உண்மையான சேவைகளை நிரூபிப்பதற்காக ISO 9001: 2000 சான்றுப்பத்திரத்தை மு.த.மு. பிரிவு பெற்றுள்ளது.


முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவின் வேறு செயற்பாடுகள்

2014ஆம் ஆண்டின் போது பிரிவினால் பெருமளவு திட்டங்கள் அதாவது, 14 டிப்ளோமா திட்டங்கள், 02 உயர் டிப்ளோமா திட்டங்கள், 22 கணனி சான்றுப்பத்திரத் திட்டங்கள், 06 வேறு திட்டங்கள் நடத்தப்பட்டன.

முகாமைத்துவத் தகவல் முறைமை பிரிவினால் நடத்தப்பட்ட திட்டங்கள

		2013		2014	
	வகுதி	பயிற்சிநெறி களின் எண்.	பங்கெடு ப்பாளர் களின் எண்.	பயிற்சிநெறி களின் எண்.	பங்கெடு ப்பாளர் களின் எண்.
1	உயர் டிப்ளோமா பயிற்சிநெறிகள்	2	280	2	337
2	டிப்ளோமா பயிற்சிநெறிகள்	10	764	14	609
3	சான்றுப்பத்திர பயிற்சிநெறிகள்	19	931	22	919
4	வேறு	10	207	6	142
	மொத்தம்	**41**	**2182**	**44**	**2007**

அட்டவணை 06 - முகாமைத்துவத் தகவல் முறைமை பிரிவினால் நடத்தப்பட்ட திட்டங்கள்



உருபு 06 - முகாமைத்துவத் தகவல் முறைமை பிரிவினால் நடத்தப்பட்ட திட்டங்கள்

2014ஆம் ஆண்டின் போது, முகாமைத்துவத் தகவல் முறைமைகள் பிரிவின் திட்டங்களில் மொத்தமாக 2,007 பேர் பங்கெடுத்தனர். உயர் டிப்ளோமா திட்டங்களில் 337 பேரையும், டிப்ளோமா திட்டங்களில் 609 பேரையும், சான்றளிப்புப் பயிற்சிநெறிகளில் 919 பேரையும், வேறு திட்டங்களில் 142 பேரையும் மாணவர்கள் கொண்டுள்ளனர்.

வருமானத் தோற்றுவிப்பு


2014ஆம் ஆண்டின் போது முகாமைத்துவத் தகவல் முறைமைகள் பிரிவினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 165 மில்லியனாகும். 2014ஆம் ஆண்டின் போது தோற்றுவிக்கப்பட்ட வருமானம் முன்னைய வருடங்களை விட கணிசமானளவு உயர்வானது என்பதை பின்வரும் அட்டவணை 07 காட்டுகின்றது.

வருமானத் தோற்றுவிப்பு - முகாமைத்துவத் தகவல் முறைமைப் பிரிவு

ரூ. மில்லியன்

	2010	2011	2012	2013	2014
முகாமைத்துவத் தகவல் முறைமைப் பிரிவினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்	184	245	152	165	159

அட்டவணை 07 - முகாமைத்துவத் தகவல் முறைமைகள் பிரிவினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்



உருபு 07 - முகாமைத்துவத் தகவல் முறைமைகள் பிரிவினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்

மாகாணங்களுக்கு முகாமைத்துவப் பயிற்சியை எடுத்துச் செல்வதில் 2013ஆம் ஆண்டுக்குள் மூன்று பிராந்திய நிலையங்களை தேசிய வியாபார முகாமை நிறுவனம் அமைத்துள்ளது.

குருநாகல் பிராந்திய நிலையம்


1986இல் ஆரம்பிக்கப்பட்ட குருநாகல் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகள் மத்தியில் பின்வருவன விளங்குகின்றன. கணனிமயப்படுத்தப்பட்ட முறைமைகளின் அபிவிருத்தி மீதான முழு நேர டிப்ளோமா பயிற்சிநெறி மற்றும் உயர் டிப்ளோமா பயிற்சிநெறிகள், கணனி பிரயோகம் மீதான டிப்ளோமா மற்றும் சான்றுப்பத்திர பயிற்சிநெறிகள், மனித வள முகாமைத்துவம் மற்றும் வியாபார முகாமைத்துவம் மீதான டிப்ளோமா பயிற்சிநெறிகள், அடிப்படைப் பயிற்சிநெறிகள், ஆங்கில மொழி மீதான டிப்ளோமா, உயர்தர சான்றுப்பத்திர மற்றும் சான்றுப்பத்திர பயிற்சிநெறிகள். முறைமையான தன்மையொன்றில் இத்திட்டங்கள் நடத்தப்படு முகமாக ஒரு புதிய கட்டிடம் நிருமாணிக்கப்பட்டு 2008 ஒக்டோர் 31 அன்று திறந்து வைக்கப்பட்டது. கருத்திட்டத்தின் முழு ஆகுசெலவு ரூபா 141 மில்லியனாகும். இது நான்கு மாடியிலான கட்டிடம் என்பதுடன், பின்வரும் வசதிகளைக் கொண்டுள்ளது:

- முழுமையாகச் சாதனங்கள் பொருத்தப்பட்ட விரிவுரை மண்டபங்கள்
- சகல அவசியமான உபகரணங்களுடன் கணனி ஆராய்ச்சி ஆய்வுகூடங்கள்
- ஒரு நவீன கேட்போர்கூடம்
- நூலக வசதிகள்
- இன்டர்நெற் மற்றும் புரோட் பான்ட் வசதிகள்
- நலன்புரி மற்றும் உணவக வசதிகள்
- சகல வசதிகளுடன் இரு விடுதிகள்
- வாகன தரிப்பிட வசதிகள்

2013இலும், 2014இலும் குருநாகல் பிராந்திய நிலையத்தில் பின்வரும் பயிற்சிநெறிகள் நடத்தப்பட்டன.

		2013		2014	
	வகுதி	பயிற்சிநெறி களின் எண்.	பங்கெடு ப்பாளர் களின் எண்.	பயிற்சிநெறி களின் எண்.	பங்கெடு ப்பாளர் களின் எண்.
1	உயர் டிப்ளோமா திட்டங்கள்	3	123	4	131
2	டிப்ளோமா திட்டங்கள்	8	357	10	305
3	உயர்தர சான்றுப்பத்திர பயிற்சிநெறிகள்	11	413	9	251
4	சான்றுப்பத்திர பயிற்சிநெறிகள்	12	378	11	322
5	அடிப்படைத் திட்டங்கள்	6	175	5	100
6	உள் வீட்டுத் திட்டங்கள்	1	13	2	57
	மொத்தம்	**41**	**1459**	**41**	**1,166**

அட்டவணை 08 - குருநாகல் நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள்



உருபு 08 - குருநாகல் நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள்

வருமானத் தோற்றுவிப்பு


குருநாகல் பிராந்திய நிலையத்தின் முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவும், முகாமைத்துவ தகவல்கள் முறைமைகள் பிரிவும் 2014இல் ரூபா 81 மில்லியன் கொண்ட வருமானமொன்றை ஈட்டியது. குருநாகல் நிலையத்தின் வருமானம் கணிசமானளவு அதிகரித்துள்ளது என்பதை கீழேயுள்ள அட்டவணை காட்டுகின்றது.

வருமானத் தோற்றுவிப்பு – குருநாகல் பிராந்திய நிலையம்

ரூ. மில்லியன்

	2010	2011	2012	2013	2014
குருநாகல் பிராந்திய நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்	54	61	66	78	81

அட்டவணை 09 - குருநாகல் பிராந்திய நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்




உருபு 09 - குருநாகல் பிராந்திய நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்

கண்டி பிராந்திய நிலையம்

மத்திய மாகாணத்தில் கணனி மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி கற்கைகளுக்கான அதிகரித்து வரும் கிராக்கிக்கு ஈடுகொடுக்கு முகமாக 1996இல் கண்டி பிராந்திய நிலையம் (அஸ்கிரிய வீதியில் அமைந்துள்ளது) திறந்து வைக்கப்பட்டது. கண்டி, அஸ்கிரிய வீதியில் அமைந்துள்ள நவீன வசதிகளைக் கொண்டுள்ள மிகவும் இடப்பரப்பிலான நான்கு மாடியிலான கட்டிடமொன்றுக்கு நிலையம் பின்னர் இடமாற்றப்பட்டது. மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான வசதிகளையும், சூழல்களையும் கொண்டுள்ள இந்நிலையம் சிறந்த விளைவுகளை அறுவடை செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முகாமைத்துவம், மற்றும் தகவல் தொழில்நுட்பம் மீது பெருமளவு திட்டங்கள் இந்நிலையத்தில் நடத்தப்படுகின்றன. 2013இலும், 2014இலும் கண்டி பிராந்திய நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள் கீழே சாராம்சப்படுத்தப்பட்டுள்ளன.

		2013		2014	
	வகுதி	பயிற்சிநெறிகளின் எண்.	பங்கெடுப்பாளர்களின் எண்.	பயிற்சிநெறிகளின் எண்.	பங்கெடுப்பாளர்களின் எண்.
1	உயர் டிப்ளோமா திட்டங்கள்	3	86	4	199
2	டிப்ளோமா திட்டங்கள்	10	486	11	431
3	உயர்தர சான்றுப்பத்திர திட்டங்கள்	10	412	11	315
4	சான்றுப்பத்திர திட்டங்கள்	10	390	11	368
5	அடிப்படைத் திட்டங்கள்	4	234	4	105
6	உள்வீட்டுத் திட்டங்கள்			3	10
	மொத்தம்	**37**	**1,608**	**44**	**1,428**

அட்டவணை 10 – கண்டி நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள்



உருபு 10 – கண்டி பிராந்திய நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள்

வருமானத் தோற்றுவிப்பு


2014ஆம் ஆண்டின் போது கண்டி பிராந்திய நிலையத்தில் முகாமைத்துவ அபிவிருத்தி பிரிவினாலும், முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவினாலும் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 85 மில்லியனாகும். கடந்து போன வருடங்களில் கண்டி பிராந்திய நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் அதிகரித்துள்ளதை கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

வருமானத் தோற்றுவிப்பு – கண்டி பிராந்திய நிலையம்

ரூ. மில்லியன்

	2010	2011	2012	2013	2014
கண்டி பிராந்திய நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்	23	35	53	78	85

அட்டவணை 11 – கண்டி பிராந்திய நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்



உருபு 11 – கண்டி பிராந்திய நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்


காலி மற்றும் மாத்தறை பிராந்திய நிலையம்

தென் மாகாணத்தில் முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்பம் மீதான கல்விக்கான வசதிகளை வழங்குவதற்காக காலியில் நிலையமொன்று திறந்துவைக்கப்பட்டது. இது எம்முடன் உயர் கல்வியை நாடும் ஒவ்வொரு நூற்கல்வியாளருக்கும் படிப்படியான கல்விசார் தொழில் பாதையொன்றுக்கு உத்தரவாதமளிக்கும் புதிதாக கட்டப்பட்டதும், முழுமையான வசதியைக் கொண்ட நிறுவனமொன்றாகும். முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறையில் பட்டத் திட்டங்கள், டிப்ளோமா திட்டங்கள், சான்றுப்பத்திரத் திட்டங்கள், உள்-வீட்டுத் திட்டங்கள், செயலமர்வு மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஆகியன 2014இலிருந்து ஆரம்பித்து காலி மற்றும் மாத்தறை நிலையங்களில் வழங்கப்படுகின்றன.

இப் பிராந்தியங்களில் வளர்ச்சியுறும் பயிற்சி மற்றும் கல்வித் தேவைகளுக்கு ஈடுகொடுப்பதற்காக உலகத் தரத்திலான வசதிகளுடன் உகந்த கற்கை சூழலொன்றில் கிராமியப் பகுதிகளுக்கு தரத்திலான வாழ்க்கைத்தொழில் கல்வியையும், பயிற்சியையும் எடுத்துச் செல்லும் குறிக்கோளுடன் விஸ்தரிப்புத் திட்டமொன்றை தே.வி.மு.நி. பொறுப்பேற்றுள்ளது. இக் குறிக்கோளை மனதில் வைத்து தகுதிவாய்ந்ததும், பயிற்றுவிக்கப்பட்டதுமான ஆளணியினருக்காக இளைஞரினதும், தொழிற்துறையினரதும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக முக்கியமான மாவட்டங்களில் எதிர்காலத்தில் மேலும் பிராந்திய நிலையங்கள் உருவாக்கப்படும். 2013இலும், 2014இலும் காலி மற்றும் மாத்தறை நிலையங்களில் பின்வரும் திட்டங்கள் நடத்தப்பட்டன.

		2013		2014	
	வகுதி	பயிற்சிநெறிகளின் எண்.	பங்கெடுப்பாளர்களின் எண்.	பயிற்சிநெறிகளின் எண்.	பங்கெடுப்பாளர்களின் எண்.
1	உயர் டிப்ளோமா திட்டங்கள்	3	134	4	111
2	டிப்ளோமா திட்டங்கள்	10	419	11	385
3	உயர்தர சான்றுப்பத்திர திட்டங்கள்	12	406	14	356
4	சான்றுப்பத்திர திட்டங்கள்	9	276	8	251
5	அடிப்படைத் திட்டங்கள்	4	93	4	67
6	உள்வீட்டுத் திட்டங்கள்				
	மொத்தம்	**38**	**1328**	**41**	**1170**

அட்டவணை 12 – காலி மற்றும் மாத்தறை நிலையங்களில் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள்



உருபு 12 – காலி மற்றும் மாத்தறை பிராந்திய நிலையங்களில் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள்

வருமானத் தோற்றுவிப்பு


முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் தகவல் முறைமைகள் பிரிவினால் காலி பிராந்திய நிலையத்தில் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 82 மில்லியனாகும். 2014ஆம் ஆண்டின் போது காலி நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் அதிகரித்துள்ளது என்பதை பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

வருமானத் தோற்றுவிப்பு – காலி பிராந்திய நிலையம்

ரூ. மில்லியன்

	2010	2011	2012	2013
காலி பிராந்திய நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்	32	48	62	83

அட்டவணை 13 – காலி பிராந்திய நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகள்



உருபு 13 - காலி பிராந்திய நிலையத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்







பயிற்சிநெறி பங்கெடுப்பாளர்களுக்கும், உயர்தொழில்சார் பதவியணியினருக்கும் ஈடுசெய்வதற்காக முழுமையான நூலகம் ஒன்றை நிறுவனம் சொந்தமாகக் கொண்டுள்ளது.

நோக்கங்கள்

அறிவையும், செயற்றிறனையும் மேம்படுத்துவதற்கும், உயர்த்துவதற்கும் அவசியமான தகவலை வழங்குவதும், நிறுவனத்தினால் உள்ளடக்கப்பட்டுள்ள பயிற்சித் துறையில் அவசியமான தகவலை வழங்குவதும் அத்துடன் உசாவுகை சேவைகளுக்கு வசதியளிப்பதற்காக போதியளவு வளங்களை வழங்குவதுமே நூலக, ஆவண நிலையத்தின் நோக்கங்களாகும்.

வகைப்படுத்தல் முறைமை

நூலகத்தினால் பயன்படுத்தப்படும் வகைப்படுத்தல் அமைப்பாக உலகளாவிய தசம வகைப்படுத்தல் விளங்குகிறது. 1990 ஏப்ரலில் 'யுனெஸ்கோ'வினால் அறிமுகப்படுத்தப்பட்ட கணனி-அடிப்படையிலான நூல் விபரப்பட்டியல் தகவல் அமைப்புக்களை பயன்படுத்தி அது ஆரம்பமாகியது. இது நுண் CDS/ISIS மற்றும் WINISIS மென்கணிய பொதியாகும். ACCESS புதிய வாசகத்துடன் விஷுவல் பேஸிக்கும் பயன்படுத்தப்படுகின்றது. நூலகமானது வார நாட்களிலும் அத்துடன் சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் வழமையான வேலை நேரங்களில் திறந்திருக்கும்.

பாடங்கள்

நிறுவனங்களின் கல்விசார் திட்டங்களினால் உள்ளடக்கப்பட்ட பாடங்கள் வருமாறு: வியாபார முகாமைத்துவம், கணக்கீடு மற்றும் நிதிசார் முகாமைத்துவம், கைத்தொழில் எந்திரவியல், கட்டிடக்கலை, சந்தைப்படுத்தல், பொருளியல், வியாபாரச் சட்டம், சிறு அளவிலான கைத்தொழில்கள், ஆராய்ச்சி முறைமையியல், பயிற்சி, மனோதத்துவம், புள்ளிவிபரம், கணனி விஞ்ஞானம், தொடர்பாடல், உற்பத்தித்திறன், பொதுசன உறவுகள், அலுவலக நிருவாகம், இலத்திரனியல், ஆங்கில, மற்றும் தமிழ் மொழிகள்.

சேவைகள்

உசாதுணைக்கான வசதிகளும், நூல்களை இரவல் கொடுப்பதற்குமான வசதிகள் கிட்டுகின்றன. ஏனைய சேவைகள் மத்தியில் சுட்டிகளினதும், கையகப்படுத்தல் நிரல்களினதும் மற்றும் சஞ்சிகைகளின் உள்ளடக்க பக்கங்களினதும் விநியோகங்கள் விளங்குகின்றன. நூலக தரவு தளத்தையும், நடைமுறையிலான விழிப்பியல் சேவையையும் பயன்படுத்தி தகவலைத் தேடுதல் உட்பட தெரிவிலான தகவலையும் நூலகம் வழங்குகின்றது. நூலகங்களுக்கு இடையிலான இரவல்கள், ஆவணப்படுத்தல் சேவை, புகைப்படப்பிரதியெடுத்தல் சேவை, தகவல் மற்றும் அறிவுறுத்தல் இன்டர்நெற்றுக்கான இலவசமான அடைதல் மற்றும் ஈமெயில் ஊடாக தகவலை மீட்பித்தல் ஆகியவற்றிலிருந்து உபயோகிப்பாளர்கள் நன்மையடைய முடியும்.

தே.வி.மு.நி. மீதான தகவலுடன் அறிக்கைகள் உட்பட செய்திக்கடிதங்களின் சேகரிப்பு, சுட்டிகளின் தொகுப்பு, நூல் பொருட்காட்சிகளை நடத்துதல், தகவல் பரிமாற்றச் சேவைகள், நூலகங்களுக்கிடையிலான உறவு, மற்றும் தகவலின் அபிவிருத்தியில் தேசிய, சர்வதேச ஒத்துழைப்பு ஆகியனவே நூலகத்தின் விசேட செயற்பாடுகளாகும்.

சஞ்சிகை உள்ளடக்கப் பக்க காட்டிகள், கட்புல சாதனங்கள், CD ROMகளின் காட்டி, பருவகால உடமை, நடப்பு தகவல் சேவையின் தெரிவிலான பரம்பல், நடப்பு விழிப்பியல் சேவை மற்றும் சட்டங்களின் காட்டிகள் ஆகியன நூலகத்தின் வெளியீடுகளாகும்.

வளங்கள்

நூல்களின் எண்ணிக்கை

வகுதி	2013	2014
நூல்கள் (கொழும்பு பிரதான கிளை)	26748	27064
குருநாகல், கண்டி, காலி, மற்றும் மாத்தறைக் கிளைகளில் கையகப்படுத்தப்பட்ட நூல்கள்	3302	3850
உசாவுகை அறிக்கைகள்	200	200
செய்திப்பத்திரிகை நறுக்குகள்	530	560
வீடியோ வளங்கள்	71	71
பருவகால வெளியீடுகள் (தற்போதைய தொகை)	65	65
பருவகால உடமைகள்	175	175
ஓடியோ வளங்கள்	30	30
தேசப்படங்கள்	10	10
கருத்திட்ட அறிக்கைகள்	4560	4560
துண்டுப்பிரசுரங்கள்	90	90
CD ROMS	560	580

விசேட ஒதுக்குகள்

- இலங்கை ஒதுக்குகள்
- ஆசிய உற்பத்தித்திறன் தாபன வெளியீடுகள்
- கம்பெனி வருடாந்த அறிக்கைகள்
- பயிற்சிச் செயற்பாடுகள் சம்பந்தமான தகவல்
- தே.வி.மு.நி. உசாவுகை அறிக்கைகளும், மாணவர் கருத்திட்ட அறிக்கைகளும்
- பருவகால உடமைகள்
- மாணவர்களிலான கருத்திட்ட அறிக்கைகள்
- கட்புலத் தகவல்
- ஆங்கில மொழியில் வெளியீடுகள்
- தமிழ் மொழியில் வெளியீடுகள்
- கட்டிடக்கலை மீதான வெளியீடு

2014ஆம் ஆண்டின் போது நூலகத்திற்கான கொள்வனவுகள்

2014ஆம் ஆண்டின் போது நூலகத்தினால் செய்யப்பட்ட கொள்வனவுகளின் விபரங்கள் வருமாறு:

2014இல் கொள்வனவு செய்யப்பட்ட நூல்களின் பெறுமதி	ரூ. 381,616.58
2014இல் கொள்வனவு செய்யப்பட்ட பருவகால வெளியீடுகளின் பெறுமதி	ரூ. 252,084.15
மொத்தம்	ரூ. **633,700.73**

தொழில் வழிகாட்டல் அலகு

பட்டதாரிகள் வெளிப்படுத்தப்பட வேண்டிய கல்வியினதும், பயிற்சியினதும் முக்கிய அங்கமொன்றாக தொழில் வழிகாட்டல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தொடர்பான துறைகளில் தொழில் வழங்குனர்களை சந்திப்பதற்காக வருங்கால மாணவர்களுக்கு ஆதரவையும், ஆலோசனையையும் அத்துடன் வழிகாட்டலையும் தொழில் வழிகாட்டல் அலகு வழங்குகின்றது. தலைமைத்துவம், குழாம் பணித் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், நிருவாகரீதியிலான திறன்கள், சந்தைப்படுத்தல் மற்றும் தொழில்துறை உரிமைத்துவத் திறன்கள் போன்ற தொழில் தொடர்பான திறன்களை விருத்தி செய்வதே இவ்வலகின் பிரதான குறிக்கோளாகும்.

தொழில் வழிகாட்டல் அலகின் பணிகள்:

- பட்டதாரி மாணவர்களுக்கு கைத்தொழில் பயிற்சியை ஒழுங்குசெய்தல்
- மாணவர்களின் தொழில் அபிவிருத்தித் திட்டத்தை விருத்தி செய்வதற்கும், அமுல்படுத்துவதற்கும் மாணவர்களுக்கு ஆதரவளித்தல்
- மாணவர்களின் தொழிலுக்காக உண்மைநிலையிலான குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் உருவாக்குவதற்கு மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதுடன் உதவியளித்தல்
- மாணவர்களின் தொழில் அபிவிருத்தி திட்டத்தை நிறைவேற்றுவதில் திறன்களில் அல்லது பயிற்சியில் உள்ள ஏதாவது இடைவெளிகளை எவ்வாறு நிரப்புவது என்பது மீது மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்



பரீட்சை அலகு

2007இல் தாபிக்கப்பட்ட தே.வி.மு.நி.இன் பரீட்சைகள் அலகு பரீட்சையின் நடைமுறையை கையாளுகின்ற தே.வி.மு.நி.இன் செயற்பாட்டிலான கரங்களில் ஒன்றாகும். எனவே, மாணவர்களின் பதிவேடுகளை தாங்கிக்கொள்கின்ற பாரமான பொறுப்பொன்றை பரீட்சைகள் அலகு கொண்டுள்ளது. கேள்விப் பத்திரங்களும், முடிவுகளும் இரகசியமான விடயமாக கருதப்படவேண்டும் என்பதனால் எட்டு பணியாட் உறுப்பினர்களைக் கொண்டுள்ள பரீட்சை அலகின் குழாமானது இரகசியத்தன்மையினதும் அத்துடன் பாதுகாப்பினதும் மிக உயர்ந்த மட்டமொன்றை பேணுவதற்கான சகல சாத்தியமான நடவடிக்கையை எடுக்கின்றது.

பரீட்சை அலகின் செயற்பாடுகள்:

- நிறுவனத்தின் விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்ப சகல பரீட்சை நடைமுறைகளை நிருவகித்தல்
- பரீட்சைகள் தொடர்பான சகல மாணவர்களினதும் பதிவேடுகளை நிருவகித்தல்
- பிராந்திய நிலையங்களின் சகல பதிவேடுகளையும் நிருவகித்தல்
- மேற்பார்வை தேவைப்பாடுகளை நிருவகித்தல்

மருத்துவ நிலையம்

தே.வி.மு.நி.இன் மாணவர்களினதும் ஊழியர்களினதும் ஆரோக்கியத்தை கவனிக்கும் நோக்கமொன்றுடன் சுகாதார சிகிச்சை நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எம்.பி.பி.எஸ். தகைமையுடன் வைத்தியர் ஒருவரினதும், தாதியொருவரினதும் உதவியுடன் சேவைகளை சிகிச்சை நிலையம் வழங்குகின்றது.





இலக்கரீதியிலான வாய்ப்புக்களுக்கான கொரிய முகவராண்மை (இ.வா.கொ.மு.)



இலக்கரீதியிலான வாய்ப்புக்கும், மேம்படுத்த லுக்குமான கொரிய முகவராண்மை – தே.வி.மு.நி.இல் இலக்கரீதியிலான சர்வதேச அடைதல் நிலையமொன்றை கொரிய குடியரசின் இ.வா. கொ.மு. தாபித்துள்ளது. வலைப்பின்னல் ஓய்விடம், 30 புத்தம் புதிய தனிப்பட்ட கணனிகளுடன் தகவல் தொழில்நுட்ப பயிற்சி ஆய்வுகூடம், 50 ஆசனத்திலான கருத்தரங்கு அறை மற்றும் நிருவாக அலுவலகம் ஆகியவற்றை இந்த நிலையம் கொண்டுள்ளது. சகாயமான கட்டணமொன்றில் வலையமைப்பு அடைதலுக்கும் மற்றும் மிகப் பிந்திய கணனி முறைமைகளுக்குமான வசதிகள் எமது சகல மாணவர்களுக்கும் வழங்கப்படும்.







எமது மாணவர்களின் ஆரோக்கியத்திற்கும், போஷாக்கிற்கும் முன்னுரிமையை வழங்குவதற்காக நியாயமான விலையொன்றுக்கு உருமாதிரியான இலங்கை உணவு வகைகளை தே.வி.மு.நி. உணவகம் வழங்குகின்றது. தே.வி.மு.நி. கட்டிடத்தின் நில மட்டத்தில் அது அமைந்துள்ளதனால், தமது உணவுகளை வாங்குவதற்கு மாணவர்கள் இலகுவான அடைதலைக் கொண்டுள்ளார்கள்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. வீரீவை/எப்/என்ஐபீஎம்/1/14/01

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2016 ஆகஸ்ட் 11

தலைவர்,
தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம்

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தினதும் அதன் தொகுதிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒன்றிணைந்த நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1976 இன் 23 ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவக சட்டம் மற்றும் 1991 இன் 28 ஆம் இலக்க திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. துணைக் கம்பனியின் கணக்குகள் அதன் அங்கத்தவர்களால் நியமிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றினால் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2015 நவம்பர் 03 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம் - தொகுதி

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் மற்றும் அதன் அதன் தொகுதிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

அபிப்பிராயம் - நிறுவகம்

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 16

முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பாவனையில் காணப்படுகின்ற ரூபா 28,442,953 கிரயமான 70 சொத்து விடயங்களின் நியாயப் பெறுமதிகளைக் காட்டுவதற்காக மீள்கணிப்பீடு செய்து கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.3 பெறவேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோர் மீதி ரூபா 696,186 தொகை மற்றும் 2012 யூன் 22 ஆந் திகதி மூடப்பட்ட யாழ்பாணத்தில் அமைந்துள்ள கட்டிடத்திற்காகச் செலுத்தப்பட்ட முற்பணத்திலிருந்து ரூபா 30,124 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) 2010 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவு	2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ஊக்குவிப்புப் படிக்காக செலுத்தவேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கொடுப்பனவு அந்த ஊக்குவிப்புப்படி செலுத்தப்பட்ட மாதத்தின் போது ஒரே தடவையில் கழிப்பதற்காக வருமான வரி சுற்றறிக்கை 2 இற்குரியதாகக் கொண்டு கணிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், அந்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை 12 மாதங்களுக்காகப் பிரித்து தனித்தனியாக அந்தந்த மாதத்தின் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு பொதுவான வரிச் சுற்றறிக்கை 01 இன் கீழ் உழைக்கும் போதே வரிசெலுத்தல் கணிப்பிடப்பட்டிருந்தது.
(ஆ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 06 ஆம் பந்தி	வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு எல்லையை விஞ்சி மேற்கொள்ளப்படுகின்ற விற்பனை மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக நிதி, திட்டமிடல் அமைச்சரின் அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது விளம்பர நடவடிக்கைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 37,500,000 தொகையினை விஞ்சி ரூபா 9,802,706 செலவிடப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள் - தொகுதி

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக தொகுதியின் செயல்நடவடிக்கைகளிலிருந்து தேறிய இலாபம் (வரிக்கு முன்) ரூபா 410,101,233 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 500,954,657 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 90,853,424 தொகையான வீழ்ச்சியினைக் காணமுடிந்தது. மீளாய்வாண்டின் போது தொகுதியின் வருமானம் ரூபா 218,651,066 தொகை அதிகரித்திருந்த போதிலும் சம்பளம் மற்றும் படிகள் ரூபா 45,767,148 இனாலும், விரிவுரை மற்றும் பயிற்சிச் செலவினம் ரூபா 192,313,498 இனாலும், பெறுமானத் தேய்வை உள்ளடங்கலாக நிறுவகத்தின் ஏனைய செலவினம் ரூபா 71,217,440 இனாலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

நிதி விளைவுகள் - நிறுவகம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவனத்தின் செயல்நடவடிக்கைகளிலிருந்து தேறிய இலாபம் (வரிக்கு முன்) ரூபா 240,026,097 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 284,752,742 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 44,726,645 தொகையான வீழ்ச்சியினைக் காணமுடிந்தது. மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகள் ரூபா 22,456,978 இனாலும், விரிவுரை மற்றும் பயிற்சிச் செலவினம் ரூபா 12,684,563 இனாலும், நிறுவகத்தின் ஏனைய செலவினம் ரூபா 7,723,305 இனாலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தில் மீளாய்வாண்டின் பாடநெறி வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 18,374,088

இனால் அதாவது 2 சதவீதத்தினால் அதிகரிக்கும்போது நேர்ச் செலவினம் ரூபா 35,141,541 இனால் அதாவது 18 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக ஆண்டின் மொத்த இலாபத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 16,767,453 இனால் அதாவது 3.6 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் கொழும்பு தலைமை அலுவலகம் மற்றும் கண்டி, குருணாகலை, காலி மற்றும் மாத்தறை போன்ற கிளைகளில் மீளாய்வாண்டிலும் கடந்த 04 ஆண்டு காலப்பகுதியிலும் நடாத்தப்பட்ட பாடநெறி மற்றும் பங்குபற்றிய மாணவர் எண்ணிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொழும்பு தலைமை அலுவலகத்தில் 2010 ஆம் ஆண்டில் 142 பாடநெறிகள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அது 2012 ஆம் ஆண்டு வரையில் 150 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் பாடநெறிகளின் எண்ணிக்கை 143 வரை குறைவடைந்திருந்தது. இந்த பாடநெகளுக்காக பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டின்போது 8,139 வரை அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது 6,011 வரை குறைவடைந்திருந்தது.

(ii) கண்டிக் கிளையில் 2010 ஆம் ஆண்டின் போது 781 மாணவர்களின் பங்குபற்றலுடன் 23 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அது சீராக அதிகரிக்கப்பட்டு மீளாய்வாண்டு இறுதிவரையில் பாடநெறிகளின் எண்ணிக்கை 44 ஆகவும் மாணவர்களின் எண்ணிக்கையை 1,428 வரை அதிகரிக்கவும் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் குருணாகலைக் கிளையில் 2010 ஆம் ஆண்டில் 48 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 41 ஆகும். பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கையும் அதன் பிரகாரம் குறைவடைந்திருந்தது.

(iii) காலிக் கிளையில் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 31 ஆக இருந்ததுடன் அது 2013 ஆம் ஆண்டு வரையில் 38 வரை அதிகரித்து அதன் பிரகாரம் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் முடியுமாக இருந்தது. எவ்வாறாயினும் மீளாண்வாண்டின் போது மாத்தறையில் புதிய கிளை திறந்து வைக்கப்பட்டமையின் காரணமாக அதில் 08 பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் காலியில் பாடநெறிகளின் எண்ணிக்கை

33 ஆக இருந்தது. காலி மற்றும் மாத்தறையில் ஒட்டு மொத்தமாக கவனத்தில் கொள்ளும் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 12 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது.

(iv) ஒட்டுமொத்தமாகக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் 236 பாடநெறிகளுக்காக 11,423 மாணவர்கள் பங்குபற்றியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின்போது எண்ணிக்கை 269 வரை அதிகரித்திருந்த போதிலும் அதில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 9,775 வரை குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின்போது நடாத்தப்பட்ட செயலமர்வுகள் மற்றும் குறுங்கால பாடநெறிகளின் எண்ணிக்கை குறைவடைந்தமை இதற்குக் காரணமாக இருந்ததாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் உள்வந்து, பாடநெறிகளை விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை 400 ஆக இருந்தது. மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கான காரண விடயங்கள் தொடர்பாக பரிசீலனை செய்து அதற்கு தீர்வாக புதிய பாடநெறியொன்றை அறிமுகப்படுத்தி சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்ட பாடநெறிகளை அமுல்படுத்துவதற்கும் நிறுவகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றமை

(அ) 2013 ஒக்தோபர் 17 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள காணி, மானியமாக தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்திற்கு கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணியின் சட்டரீதியான உரித்து நிறுவகத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 நவம்பர் 07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிறுவகத்திற்குக் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட காலி நகரத்தில் அமைந்துள்ள காணியொன்று 2010 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 302,707,070 தொகை செலவில் கல்வி நிலைமையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியின் சட்டரீதியாக உரித்து

2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நிறுவகத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 விளைவற்ற சொத்துக்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 9,140,508 தொகையான காகிதாதிகள் இருப்பில் ரூபா 327,324 தொகையான காகிதாதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2012 பெப்ரவரி 03 ஆந் திகதி வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரகாரம் இணைப்பு உத்தியோகத்தர் பதவியொன்றுக்கு 2012 பெப்ரவரி 08 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 06 மாத காலத்திற்கு மாதாந்தம் ரூபா 30,000 தொகையொன்று செலுத்தும் அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். 2014 திசெம்பர் 12 ஆந் திகதி வரை அவரின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டு 2 வருடமும் 11 மாதங்களும் அளவிலான காலம் சேவையாற்றி இருந்த போதிலும் அந்தக் காலப் பகுதியில் அவரின் வருகை மற்றும் வெளிச் செல்லல் தொடர்பான பதிவுகள் வைக்கப்படாதிருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பான தகவல்களும் பெறப்படாது நிருவகத்தினால் அந்த உத்தியோகத்தருக்கு உரிய காலப்பகுதியில் ரூபா 1,050,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 10 ஆந் திகதிய சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

5.2 கூட்டிணைந்த திட்டம்

2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் தேறிய இலாபத்தின் அதிகரிப்பு முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக வருடாந்தம் 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும்

மீளாய்வாண்டில் இலாபத்தின் வீழ்ச்சி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 15.7 சதவீதமாக இருந்தது.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தில் மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்தபோது செயற்பாட்டு வருமானம் ரூபா 25.67 மில்லியனால் அதாவது 3 சதவீதத்தால் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அபிவிருத்திச் செலவினம் 176 சதவீதத்தாலும், நன்கொடைகள் 140 சதவீதத்தாலும், மிகையூதியப்படி 83 சதவீதத்தாலும் ஆக வருடாந்த மதிப்பிடப்பட்ட செலவினத்தை விஞ்சி செலவிடப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாடநெறிகளை நடாத்துதல்
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

ஒப்பம் : எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்

2014 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான

ஒன்றுதிரண்ட நிதிசார் கூற்றுக்கள்

அறிமுகம்

இவ்வெளியீடு 2014 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு தேசிய வியாபார முகாமை நிறுவனத்திற்கான விவரணத்திலான கொள்கைக் கூற்றொன்றை கொண்டுள்ளது. நிறுவனத்தின செயற்பாட்டிலான நாணயம் இலங்கை ரூபாயாகும்.

- நிதிசார் நிலையின் ஒன்றுதிரட்டப்பட்ட கூற்று
- விரிவான வருமானக் கூற்றின் ஒன்றுதிரட்டப்பட்ட கூற்று
- ஒப்புரவில் மாற்றங்களில் ஒன்றுதிரண்ட கூற்று
- பணப்பாய்வுகளின் ஒன்றுதிரண்ட கூற்று
- குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் தெளிவுபடுத்துகின்ற குறிப்புகள்

சுருக்கக்குறியீடுகள்

தே.வி.மு.நி.	தேசிய வியாபார முகாமை நிறுவனம்
தே.வி.மு.பா.	தேசிய வியாபார முகாமைப் பாடசாலை
ப.தோ.அ.	பணம் தோற்றுவிக்கும் அலகு
வி.வ.வீ	விளைதிறன் வட்டி வீதம்
பொ.ஏ.க.த.	பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுத் தத்துவங்கள்
இ.ப.க.நி.	இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம்
இ.க.நி.	இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

உள்ளடக்கங்கள் **பக்க இல.**

நிதிசார் நிலையின் ஒன்றுதிரட்டப்பட்ட கூற்று 04

விரிவான வருமானத்தின் ஒன்றுதிரட்டப்பட்ட கூற்று 05
(செயற்பாட்டிலான செலவினங்களினால் பகுப்பாயப்பட்ட தனித்த கூற்று அணுகுமுறை)

ஒப்புரவில் மாற்றங்களின் ஒன்றுதிரட்டப்பட்ட கூற்று 06

பணப்பாய்வுகளின் ஒன்றுதிரட்டப்பட்ட கூற்று 07

நிதிசார் கூற்றுகளுகளின் அங்கத்தை அமைக்கும் குறிப்புகள் 08

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
ஒன்றுதிரட்டப்பட்ட நிதிசார் நிலை

குறிப்புகள்		டிசம்பர் 31 தே.வி.மு.நி. 2014	டிசம்பர் 31 ஒன்றுதிரண்ட 2014	டிசம்பர் 31 தே.வி.மு.நி. 2013	டிசம்பர் 31 ஒன்றுதிரண்ட 2013
சொத்துக்கள்					
நடைமுறை-சாரா சொத்துக்கள்					
ஆதனம், பொறி, சாதனங்கள்	-4	898,406,654	4,383,978,458	901,910,816	2,729,804,842
உருப்படியற்ற சொத்துக்கள்	-5	1,107,951	5,013,616	1,809,369	5,412,225
துணை நிறுவனங்களில் மூலதனம்	-6	550,000,010		450,000,010	
வேறு நடைமுறை-சாரா சொத்துக்கள்		10,573,795	10,573,795	9,430,828	9,430,828
		1,460,088,410	**4,399,565,869**	**1,363,151,023**	**2,744,647,895**
பிணைப்பண வைப்பு		**900,000.00**	**900,000.00**	**900,000.00**	**900,000.00**
நடைமுறைச் சொத்துக்கள்					
பொருட்பட்டியல்கள்	-7	9,194,901	15,630,123	6,852,694	10,414,307
நிதிசார் சொத்துக்கள்-முதிர்ச்சிக்கு ஏற்கப்பட்டது	-8	229,999,915	1,179,443,577	203,000,000	882,283,722
வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவை	-9	107,508,275	195,994,068	102,229,630	157,086,858
வேறு நிதிசாராத சொத்துக்கள்		2,231,210	2,231,210	2,091,623	2,091,623
பணம் மற்றும் வங்கி மீதி	-10	41,010,414	ww50,243,912	29,252,108	39,748,944
		389,944,715	**1,443,542,890**	**343,426,055**	**1,091,625,454**
மொத்தச் சொத்துக்கள்		**1,850,933,125**	**5,844,008,759**	**1,707,477,078**	**3,837,173,349**
நிதியம் மற்றும் பொறுப்புக்கள்					
மான்யங்கள்					
அரசாங்க உதவுதொகை	-11	**57,175,766**	**57,175,766**	**57,175,766**	**57,175,766**
மூலதனம் மற்றும் ஒதுக்குகள்					
குறிப்பிடப்பட்ட மூலதனம்					
மீள்மதிப்பிலான ஒதுக்கு	-12	151,238,166	151,238,166	151,706,814	151,706,814
தக்கவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்	- 13	792,321,994	1,311,052,373	819,628,145	1,183,972,396
		943,560,160	**1,462,290,539**	**971,334,959**	**1,335,679,210**
வேறு உதவுதொகைகள்	-14	1,068,000	1,068,000	1,068,000	1,068,000
மூலதன உதவுதொகைகள்	-15	369,776,287	369,776,287	378,067,767	378,067,767
		370,844,287	**370,844,287**	**379,135,767**	**379,135,767**
நடைமுறை சாரா பொறுப்புக்கள்					
நூலக வைப்புக்கள்		2,481,000	4,395,000	2,624,000	4,335,000
வங்கிக் கடன்			2,856,457,001		1,417,524,425
பின்போடப்பட்ட வரிப் பொறுப்பு	-16	18,229,430	18,229,430	14,901,974	16,349,461
இளைப்பாற்று நன்மைப் பொறுப்பு	-17	18,713,426	19,393,435	17,022,963	17,462,742
நடைமுறை-சாரா பொறுப்புக்கள்					
		39,423,856	**2,898,474,866**	**34,548,937**	**1,455,671,628**
நடைமுறைச் பொறுப்புக்கள்					
நூலக வைப்புக்கள்		663,000	1,533,000	987,000	1,191,000
வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவை	18	264,622,440	867,987,811	246,360,519	581,568,875
நடைமுறையிலான வரிப் பொறுப்பு	-19	173,183,616	184,242,490	17,000,000	25,816,973
ஏற்பாடுகள்	-20	1,460,000	1,460,000	934,130	934,130
		439,929,056	**1,055,223,301**	**265,281,649**	**609,510,978**
மொத்த நிதியம் மற்றும் பொறுப்புக்கள்		**1,850,933,125**	**5,844,008,759**	**1,707,477,078**	**3,837,173,349**

பக்கங்கள் 10 முதல் 25 வரை மீதுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும், பக்கங்கள் 26 முதல் 38 வரை மீதுள்ள குறிப்புகளும் இந்த நிதிசார் கூற்றுக்களின் உள்ளமைய பாகமொன்றை அமைக்கின்றன. இந்த நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்கும், சமர்ப்பணத்திற்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாகும். இந்த நிதிசார் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களின் சார்பாக கைச்சாத்திடப்பட்டது.

சுசந்த பெர்னாண்டோ	கலாநிதி இ.எ.வீரசிங்க	ஜி.டி.பேர்னாட்
தலைவர்	பணிப்பாளர் நாயகம்	பணிப்பாளர் - நிதி

குறிப்புகள்		டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு			
		தே.வி.மு.நி. 2014	ஒன்றுதிரண்ட 2014	தே.வி.மு.நி. 2013	ஒன்றுதிரண்ட 2013
வருமானம்	21	685,446,170	1,468,094,422	667,072,082	1,249,443,356
நேரடிச் செலவினங்கள்	22	230,778,668	741,479,689	195,637,128	503,399,043
மொத்த இலாபம்		**454,667,502**	**726,614,733**	**471,434,954**	**746,044,313**
வேறு வருமானம்	23	40,558,614	97,119,994	40,375,100	100,814,376
பங்கீட்டு ஆகுசெலவு					
நிருவாகச் செலவினங்கள்	24	249,587,880	400,832,841	225,428,613	340,647,519
வேறு செலவினங்கள்	25	5,799,508	9,770,708	2,015,864	2,859,117
தொழிற்பாட்டிலான இலாபம்		**239,838,728**	**413,131,178**	**284,365,577**	**503,352,053**
நிதி ஆகுசெலவு	26	1,584,478	4,801,792	1,376,232	4,160,793
நிதி வருமானம்		1,771,847	1,771,847	1,763,397	1,763,397
வருமான வரியின் முன்னரான நிகர இலாபம்		**240,026,097**	**410,101,233**	**284,752,742**	**500,954,657**
வருமான வரிச் செலவினம்	27	(26,897,147)	(42,769,496)	(34,587,953)	(47,276,376)
பங்கிடக்கூடிய இலாபத்தின் 25மூ கொண்ட வரிப் பொறுப்பு		(53,696,388)	(53,696,388)		
வரி விதிப்பின் பின் நிகர இலாபம்		**159,432,562**	**313,635,349**	**250,164,789**	**453,678,281**
வேறு விரிவான வருமானம்					
தொழிலுக்குப் பிற்பட்ட நிபுணர் இழப்பு					
நன்மைக் கடப்பாடு விற்றொழித்தல் சொத்துக்களின்		121,589	(207,395)	(415,365)	
மீள்மதிப்பு பெறுமதி		468,648	468,648	342,059	342,059
தேறிய செலாவணி					32,995
செலாவணி ஆதாய இழப்பு			95,797		(73,424)
பதவி மீதான நிபுணர் இழப்பு மீதான வரியின் தாக்கம்					
தொழில் நன்மைக் கடப்பாடு		(1,187,419)	(1,221,464)	58,232	
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்		**158,713,791**	**313,099,919**	**250,299,453**	**453,622,778**

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
ஒப்புரவில் மாற்றங்களின் ஒன்றுதிரண்ட கூற்று

	வேறு ஒதுக்குகள்	தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்	முன்னைய வருட சீராக்கல்	தே.வி.மு.நி.	ஒன்றுதிரட்டப்பட்ட
2013 ஜனவரி 1இல் - ஆண்டுக்கான இலாபம்		569,328,692		569,328,692	730,349,618
ஆண்டுக்கான இலாபம்		250,299,453		250,299,453	453,622,778
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்					
2013 டிசம்பர் 31இல்		819,628,145		819,628,145	1,183,972,396
2014 ஜனவரி 1இல் ஆண்டுக்கான இலாபம்		819,628,145		819,628,145	1,183,972,396
வருமான வரியின் மிகையான கொடுப்பனவு - 2012.:.2013			217,384	217,384	217,384
மதிப்பிறக்கத்திற்கான மிகையான ஏற்பாடு			180,069	180,069	180,069
பங்கிடக்கூடிய இலாபத்தின் 25மூஐக் கொண்ட வருமான வரிப் பொறுப்பு			(186,417,395)	(186,417,395)	(186,417,395)
2014 டிசம்பர் 31இல்		819,628,145		633,608,203	997,952,454
ஆண்டுக்கான இலாபம்		158,713,791		158,713,791	313,099,919
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்					
2014 டிசம்பர் 31இல்		978,341,936	(186,019,942)	792,321,994	1,311,052,373

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
ஒன்றுதிரண்ட பணப்பாய்வுக் கூற்று

	தே.வி.மு.நி. 2014	ஒன்றுதிரண்ட 2014	தே.வி.மு.நி. 2013	ஒன்றுதிரண்ட 2013
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பணப்பாய்வுகள்				
ஆண்டுக்கு சீராக்கப்பட்ட மேன்மிகை	240,026,097	**410,101,233**	284,752,742	500,954,657
நிதியங்களின் இடப்பெயர்ச்சியை சம்பந்தப்படுத்தாத விடயங்களுக்கான சீராக்கல்				
மதிப்பிறக்கம்	75,571,980	119,392,629	59,474,939	85,441,745
நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான நிகர (இலாபம்).'.நஷ்டம்	(1,974,101)	(1,945,981)	2,838,243	2,838,243
தொழிலுக்கு முந்திய நன்மைக் கடப்பாடு மீதான நிபுணர்கள் இழப்பு	1,279,779	1,641,596	1,231,233	1,023,263
பெறுமதியழிப்பு	(1,282,554)	(1,282,554)	(845,725)	(845,725)
பின்போடப்பட்ட வருமானம்	(8,291,481)	(8,291,481)	(8,291,481)	(8,291,481)
மூலதனம் மீதான வட்டி	(16,568,056)	(78,398,821)	(22,184,310)	(85,704,992)
திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வருமானம்				
பங்கிலாப வருமானம்	(5,500,000)		(3,500,000)	
தேறப்பட்ட வருமானம்				32,995
செலாவணி ஆதாயம்.'.இழப்பு		95,797		(73,424)
				(788,459)
	283,261,663	441,312,417	313,475,641	494,586,822
பணிக்கொடைக் கொடுப்பனவுகள்	(776,736)	(776,736)	(326,300)	(326,300)
வருமான வரிக் கொடுப்பனவு	(107,282,473)	(122,394,452)	(36,532,581)	(43,229,424)
மாற்றங்களின் முன்னரான தொழிற்பாட்டு ,லாபம் தொழிற்பாட்டு மூலதனத்தின் விடயங்களில்	175,202,454	318,141,229	276,616,760	451,031,098
நூலக வைப்பில் குறைப்பு.'.(அதிகரிப்பு)	(467,000)	402,000	(946,000)	174,000
	174,735,454	318,543,229	275,670,760	451,205,098
தொழிற்பாட்டு மூலதனம் மீதான விடயங்களில் மாற்றங்கள்				
பொருட்பட்டியல்களில் குறைப்பு.'.(அதிகரிப்பு)	(2,342,207)	(5,215,816)	2,113,862	1,174,047
வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவைகளில் குறைப்பு.'. (அதிகரிப்பு)	(5,278,645)	(38,526,208)	(11,721,610)	(28,008,722)
வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவைகளில் குறைப்பு.'.(அதிகரிப்பு)	18,261,922	286,037,937	38,474,810	190,357,274
நடைமுறை வரிப்பொறுப்பில் குறைப்பு.'.(அதிகரிப்பு)	525,870	525,870	34,130	34,130
	185,902,394	561,365,012	304,571,952	614,761,827
மூலதனத்திலான செயற்பாடுகளிலிருந்து பணப்பாய்வுகள்				
மூலதனம் மீது கிடைத்த வட்டி	16,568,056	78,398,821	22,184,310	85,704,992
நிலையான சொத்துக்களின் கொள்வனவுகள்	(71,317,338)	(86,344,216)	(126,547,031)	(235,854,060
மூலதனம் - ளேடீஆ	(100,000,000)		(100,000,000)	
றுஜீஇல் மூலதனம்		(1,686,802,479)		(1,471,873,375)
நிலையான சொத்துக்களின் விற்பனை	2,105,109	2,105,109	473,529	473,529
பங்கிலாபம்	5,500,000		3,500,000	
	38,758,221	(1,131,277,753)	104,182,760	(1,006,787,087)
நிதிப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து பணப்பாய்வுகள்				
இரவல் பெறல்களிலிருந்து வரும்படிகள்		1,438,932,576		1,417,524,425
ஆண்டின் ஆரம்பத்தில் பணம் மற்றும்				
பணச்சமப்படுத்தல் (குறிப்பு 1)	**232,252,108**	**922,032,666**	**128,069,348**	**511,295,328**
ஆண்டின் இறுதியில் பணம் மற்றும்	**271,010,329**	**1,229,687,489**	**232,252,108**	**922,032,666**
பணச்சமப்படுத்தல் (குறிப்பு 2)				
குறிப்பு 1				
வங்கி மீதி	28,733,408	39,061,244	11,826,648	42,781,128
கையிலுள்ள பணம்	518,700	687,700	1,242,700	3,514,200
குறுகிய கால வைப்புக்கள்	203,000,000	882,283,722	115,000,000	465,000,000
	232,252,108	**922,032,666**	**128,069,348**	**511,295,328**
குறிப்பு 2				
வங்கி மீதி	40,605,914	49,399,193	28,733,408	39,061,244
கையிலுள்ள பணம்	404,500	844,719	518,700	687,700
குறுகிய கால வைப்புக்கள்	229,999,915	1,179,443,577	203,000,000	882,283,722
	271,010,329	**1,229,687,489**	**232,252,108**	**922,032,666**

பக்க இல.

1.	கூட்டாண்மைத் தகவல்	10
2.	பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்	10-21
3.	அபாய முகாமைத்துவம்	22-25
4.	ஆதனம், பொறி, மற்றும் சாதனங்கள்	26-27
5.	உருப்படியற்ற சொத்துக்கள்	28
6.	மூலதனம் - தே.வி.மு.பா.	28
7.	பொருட்பட்டியல்கள்	28
8.	முதிர்ச்சிக்காக ஏற்கப்பட்ட நிதிசார் சொத்துக்கள்	28
9.	வர்த்தக மற்றும் வேறு கிடைக்கவேண்டியவை	29-30
10.	பணம் மற்றும் வங்கி மீதிகள்	30
11.	அரசாங்க உதவுதொகைகள்	31
12.	மீள்மதிப்பீட்டு ஒதுக்கு	31
13.	வருமான மற்றும் செலவினக் கணக்கில் மீதி	31
14.	வேறு உதவுதொகைகள்	31
15.	மூலதன உதவுதொகை	31
16.	பின்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்	32
17.	ஊழியர் நன்மைக் கடப்பாடுகள்	32
18.	வர்த்தக மற்றும் வேறு கொடுப்பனவுக்குரியவை	32-33
19.	நடப்பிலான வரிப் பொறுப்பு	34
20.	ஏற்பாடுகள்	34
21.	தொழிற்பாட்டிலான வருமானம்	35
22.	விற்பனையின் ஆகசெலவு	35-36
23.	வேறு வருமானம்	36
24.	நிருவாகச் செலவினங்கள்	36-38
25.	வேறு செலவினங்கள்	38
26.	நிதிசார் கட்டணங்கள்	38
27.	வருமான வரிச் செலவினங்கள்	38

நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

1. கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 கூட்டாண்மைத் தகவல்

1.1 சட்டபூர்வ மற்றும் வாழ்விட அமைப்பு

1991இன் 28ஆம் இலக்க தே.வி.மு.நி. (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1976இன் 23ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினால் தேசிய வியாபார முகாமை நிறுவனம் ஒன்றிணைக்கப்பட்டதுடன், அது 120/5 விஜேராம மாவத்தை, கொழும்பு - 7இல் அமைந்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

ஆண்டின் போது, நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள் வருமாறு:

- ✓ இணைந்த துறைகளில் தரத்திலான வியாபார முகாமைத்துவக் கல்வியையும், போதனைகளையும் வழங்குதல்.
- ✓ தாபனங்களின் முகாமையாளர்களினதும், மேற்பார்வைப் பணியாளர்களினதும் தகுதிகளை விருத்திசெய்தல்.
- ✓ தாபனங்களில் உள்ள ஊழியர்களைப் பயிறுவித்தலும், அறிவூட்டுதலும்.
- ✓ தாபனங்களில் உற்பத்தித்திறனின் மேம்படுத்தலை வசதிப்படுத்தல்.
- ✓ முகாமைத்துவ உசாவுகையினதும், ஆலோசனைச் சேவைகளினதும் ஏற்பாடு.

1.3 நிதிசார் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இந்த நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்கும், சமர்ப்பணத்திற்கும் ஆளுனர் சபை பொறுப்பாகும். நிதிசார் கூற்றுக்கள் தொடர்பிலான ஆளுனர் சபையின் பொறுப்பு "ஆளுனர் சபையின் பொறுப்பின் கூற்றில்" குறித்துரைக்கப்பட்டுள்ளது.

2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பின் அடிப்படை

இந் நிதிசார் கூற்றுக்கள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் (SLFRS/LKAS) மீது தயாரிக்கப்பட்டுள்ளன.

இக் கொள்கைகள் எப்பொழுதுமே செயற்பாட்டிலானவை என்றவாறு, முன்வைக்கப்பட்டுள்ள சகல காலங்கள் ஊடாக 2011 ஜனவரி 01இல் உள்ளவாறு நிதிசார் நிலையையிட்டு அதன் ஆரம்ப SLFRS கூற்றின் தயாரிப்பில் கணக்கீட்டுக் கொள்கைகளை நிறுவனம் முரணற்றதாகப் பிரயோகித்துள்ளது.

2.1.2 அளவீட்டின் அடிப்படை

நியாயமான பெறுமதியில் சில சொத்துக்களும், பொறுப்புக்களும் புறநீங்கலாக, சரித்திரபூர்வ ஆகுசெலவு மாற்றத்தின் கீழ் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.3 தொழிற்பாட்டிலானதும், சமர்ப்பணத்திலானதுமான நாணயம்

நிறுவனம் தொழிற்படுகின்ற ஆரம்பநிலையிலான பொருளாதாரச் சூழலின் நாணயத்தை (தொழிற்பாட்டிலான நாணயம்) பயன்படுத்தி, நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அளவிடப்படுகின்றன. நிறுவனத்தின் தொழிற்பாட்டிலானதும், சமர்ப்பணத்திலானதுமான நாணயமான இலங்கை ரூபாவில் நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2.1.4 இணக்கத்தின் கூற்று

